# කාර්ය සාධන වාර්තාව -2015
## செயல் நிறைவேற்ற அறிக்கை -2015
## PERFORMANCE REPORT -2015

# තැපැල් දෙපාර්තමේන්තුව
# அஞ்சல் திணைக்களம்
# DEPARTMENT OF POSTS


තැපැල් මූලස්ථානය
අංක ,310ඩීවිජේවර්ධන මාවත.ආර්.
කොළඹ 01000
அஞ்சல் தலைமையகம்
இல.310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை
கொழும்பு 01000
POSTAL HEADQUATERS
NO.310,D.R.WIJEWARDHANE MAWATHA
COLOMBO 01000

## நோக்கு

வாடிக்கையாளர்களை மகிழ்ச்சியுறச்செய்யும் பொருட்டு நவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தித் திறனும் தரமும் மிக்க பூரணமிக்க தபால் சேவையை ஆற்றும் ஆசியாவின் சிறந்த நிறுவனமாதல்.

## செயற்பணி

தபால் சேவையை நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களைப் பின்பற்றி மனங்கவர் சூழலில் பதவியணியினரை ஊக்குவித்து காலத்தின் காலத்தின் வாடிக்கையாளர் தேவைகளை இனங்கண்டு தற்போதுள்ள சேவைகளை மேம்படுத்தி மற்றும் புதிய சேவைகளை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் நம்பிக்கையை வென்றெடுத்து தனியார்த்துறையின் பங்களிப்புடன் வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக கவர்ச்சிகரமான சேவையைப் பெற்றுக்கொடுத்தல்

## 2014 ஆம் ஆண்டின் தலைமையக மற்றும் மாகாண அடிப்படையிலான அதிகாரிகள்

| | |
|---|---|
| தபால்மா அதிபர் | திரு. டீ.எல்.பீ.ஆர். அபேரத்ன |
| பிரதித் தபால்மா அதிபர் (நிருவாகம்) | திருமதி. எச்.டீ.சீ.பீ. குணசேகர |
| பிரதித் தபால்மா அதிபர் (நடவடிக்கை) | திரு. டபிள்யு.ஏ.ஜீ. விக்கிரமசிங்க |
| பிரதம கணக்காளர் | திரு. கே.பீ. வசந்த திலக்க |
| பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | திருமதி ஏ.ஜே.டீ.சீ.ஏ. கனேபொள |
| கணக்காளர் (முத்திரை காப்பகம்) | திரு. கே.எச்.பீ. பெரேரா |
| பிரதித் தபால்மா அதிபர் (தெற்கு) | திருமதி ஜீ. கமகே (இ.நி.சே) |
| பிரதித் தபால்மா அதிபர் (வடக்கு) | திரு. என்.ரத்தினசிங்கம் |
| பிரதித் தபால்மா அதிபர் (சப்ரகமுவ) | திருமதி. பீ.எஸ்.ஆர்.எம். விஜேராஜா (இ.நி.சே.) |
| பிரதித் தபால்மா அதிபர் (கிழக்கு) | திரு. வீ. விவேகானந்தலிங்கம் |
| பிரதித் தபால்மா அதிபர் (ஊவா) | திரு. ஆர்.டர்மசிறி பியசேன (இ.நி.சே.) |
| பிரதித் தபால்மா அதிபர் (மத்திய) | திரு. டீ.ஏ.ஆர்.கே. ரணசிங்க |
| பிரதித் தபால்மா அதிபர் (வடமேல்) | திரு. எச்.எம்.பிரேமசந்திர |
| பிரதித் தபால்மா அதிபர் (மேற்கு) | திரு. எஸ்.டபிள்யு.எம்.பீ.எல். ஹுலங்கமுவ |
| பிரதித் தபால்மா அதிபர் (வடமத்திய) | திருமதி ஜே.சீ.ஐ.டீ. சில்வா |

## உள்ளடக்கம்

1. நிறுவன ஒழுங்கமைப்பு ........ 6
2. தபால் திணைக்களத்தின் அலுவலகக் கட்டமைப்பு ........ 8
3. தபால் அலுவலக வலையமைப்பு ........ 8
4. உப தபால் அலுவலகங்கள் பற்றிய விபரங்கள் ........ 9
5. தபால் சேவைகளை விஸ்தரிப்பதன் அளவுகோல்கள் 2015 ........ 9
6. தபால் திணைக்களத்தின் வருமானம் ........ 10
7. 2015 ஆம் ஆண்டில் வழங்கிய சேவைகளின் முன்னேற்றம் ........ 10
8. 2015 ஆம் ஆண்டு பரீட்சைத் திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்ட கணக்குகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் ........ 12
9. 2015 ஆம் ஆண்டில் புதிய ஒரு நாள் கடித விநியோக சேவையின் கீழ் அதிவேக பஸ் வண்டிகள் மூலம் தபால்களைக் கொண்டு சேல்லல் ........ 12
10. 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக ஈ.எம்.எஸ் பிரிவு மற்றும் தபால் அலுவலக கருமபீடங்களினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்ட ஈ.எம்.எஸ் பொருட்களின் எண்ணிக்கை மற்றும் தபால் கட்டண வருமானம் ........ 12
11. 2015 ஆம் ஆண்டில் ஈ.எம்.எஸ். தபால் பொருட்களை விநியோகித்ததன் மூலம் பெறப்பட்ட வருமானம் ........ 13
12. காசுக்கட்டளைகளை விநியோகித்தல் ........ 13
13. காசுக்கட்டளைகளைச் செலுத்துதல் ........ 13
14. காசுக்கட்டளை வகைகளில் அனுப்பக்கூடிய உச்சளவான, ஆகக் குறைந்த தொகைகள் மற்றும் செல்லுபடியான கால எல்லை. ........ 14
15. தபாலைக் கொண்டு செல்வதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் செலுத்தப்பட்ட கட்டணங்கள் - ரூபாவில் ........ 15
16. திணைக்களத்தின் ஊழியர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஏற்பாடுகள் .. 16
17. 2015 ஆம் ஆண்டில் மாகாண ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்பாடுகளை ஒதுக்குவதும் செலவிடுவதும் ........ 16
18. தபால் திணைக்களத்தின் ஒட்டுமொத்த நிதி மீளாய்வு – 2015 ........ 17
19. வருமான மீளாய்வு ........ 18
20. மூலதனச் செலவினப் பகுப்பாய்வு ........ 19
21. வருமானப் பகுப்பாய்வு ........ 20
22. 2015ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகள் பற்றிய விபரம் ........ 20
23. நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் விபரம் - 2015 ........ 20
24. 2015ஆம் ஆண்டின் புலனாய்வு மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள் ........ 21
25. 2015 ஆம் ஆண்டின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அலுவலகங்கள் ........ 21

26. மாகாண பிரதித் தபால்மா அதிபர் பிரிவுகளின் கட்டிடங்களைப் புதுப்பித்தல் மற்றும் புனரமைப்புச் செய்வதற்குச் செலவிடப்பட்ட ஏற்பாடுகள் .................................................... 21
27. பிரதான சேவைகள்................................................................................................ 22
28. திணைக்களச் சேவைகள்........................................................................................ 22
29. 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய சேவைகள் ........................................ 24
30. 2015 ஆம் ஆண்டில் ஆரம்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் அறிமுகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ள புதிய சேவைகள் ................ 25
31. எதிர்காலத் திட்டங்கள் ............................................................................................ 25
32. மத்திய தபால் பரிமாற்ற நிலையம் ........................................................................... 27
33. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவு...................................................... 39
34. வழங்கல் பிரிவு ...................................................................................................... 41
35. முத்திரைப் பணியகம் .............................................................................................. 45
36. சர்வதேச தபால் சேவைகள் பிரிவு............................................................................. 49
37. அத்தியட்சகர் (வழங்கள்) அலுவலகம்........................................................................ 49
38. கட்டுப்பாட்டு (புலனாய்வு) அலுவலகம் ..................................................................... 52
39. இயந்திரப் பொறியியல் பிரிவு ................................................................................... 55
40. கட்டிடப் பிரிவு ....................................................................................................... 56
41. தபால் முகாமைத்துவப் பயிற்சிக் கல்லூரி................................................................... 57
42. தபால் போக்குவரத்துப் பிரிவு ................................................................................... 58
43. பராமரிப்புப் பிரிவு.................................................................................................. 60
44. காசுக் கட்டளை சேவைகள் பிரிவு............................................................................. 60
45. மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்................................................................. 61
46. தென் மாகாணம் ...................................................................................................... 61

பூரண அரச நிறுவனமான இலங்கைத் தபால் திணைக்களம் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் காணப்படுகின்றது. இதன் நிறுவனத் தலைவராக தபால்மா அதிபர் செயற்படுகின்றார். பிரதான நிறுவாக நிலையமாக தபால் தலைமையகம் காணப்படுவதுடன், நிருவாக மற்றும் செயற்பாட்டு மற்றும் கணக்கு நடவடிக்கைகள் பிராந்திய மட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய 9 மாகாணங்களுக்கும் 10 பிரதித் தபால்மா அதிபர்களும் தபால் தலைமையக மற்றும் பிரதான தபால் நடவடிக்கை நிலையமான மத்திய தபால் பரிமாற்ற நிலையமான பிரதித் தபால்மா அதிபர்கள் 3 பேரும் என்றவகையில் 13 பிரதித் தபால்மா அதிபர்கள் நிருவாகம் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## <u>நிறுவன ஒழுங்கமைப்பு</u>

தபால் திணைக்களத்திற்குள் தீர்மானம் மேற்கொள்வதை மிகவும் இலகுபடுத்தும் வகையில் அதிகாரத்தை முறையாகப் பகிர்கின்ற உத்தேச புதிய ஒழுங்கமைப்பை எதிர்காலத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது அமுலிலுள்ள பழைய ஒழுங்கமைப்பு இணைப்பு 01 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

*தபால் திணைக்களத்தின் பதவியணி பற்றிய விபரம் இணைப்பு 02 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது

## உத்தேச புதிய ஒழுங்கமைப்பு




பி.த– . பிரதித் தபால் மாஅதிபர்
பி.உ.க– . பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்
ம.த.ப– . மத்திய தபால் பரிமாற்றல்
சி.த.அ – சிரேஷ்ட தபால் அத்தியடச்கர்
பி.பி.க– . பிரதிப் பிரதம கணக்காளர்
த.அ– . தபால் அத்தியட்சகர்
த.த.அ– . தலைமைத் தபால் அலுவலகம்
உ.த.அ– . உப தபால் அலுவகம
த.அ– . தபால் அலுவலகம்
மு.த.அ– . முகவர் தபால் அலுவகம்

## தபால் திணைக்களத்தின் அலுவலகக் கட்டமைப்பு

| | |
|---|---|
| தபால் அலுவலகம் | 653 |
| உப தபால் அலுவலகம் | 3410 |
| முகவர் தபால் அலுவலகம் | 524 |
| கிராமிய முகவர் தபால் அலுவலகம் | 101 |
| தோட்டப்புற தபால் அலுவலகம் | 04 |
| **மொத்தம்** | 4692 |

## தபால் அலுவலக வலையமைப்பு

| மாகாணம் | பிராந்திய தபால் அலுவலகப் பிரிவு | தபால் அலுவலகம் | உப தபால் அலுவலகம் |
|---|---|---|---|
| மத்திய | கண்டி வடக்கு | 28 | 163 |
| | கண்டி தெற்கு | 29 | 182 |
| | நுவரெலியா | 23 | 96 |
| | மாத்தளை | 22 | 91 |
| | **மொத்தம்** | **102** | **532** |
| கிழக்கு | அம்பாறை | 10 | 56 |
| | அக்கரைப்பற்று | 13 | 52 |
| | மட்டக்களப்பு | 21 | 66 |
| | திருகோணமலை | 12 | 48 |
| | **மொத்தம்** | **56** | **222** |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 31 | 142 |
| | கிளிநொச்சி | 04 | 37 |
| | முல்லைத்தீவு | 05 | 17 |
| | மன்னார் | 08 | 36 |
| | வவுனியா | 04 | 32 |
| | **மொத்தம்** | **52** | **264** |
| வட மத்திய | அனுராதபுரம் | 27 | 183 |
| | பொலன்னறுவை | 12 | 89 |
| | **மொத்தம்** | **39** | **272** |
| சப்ரகமுவ | கேகாலை | 30 | 196 |
| | இரத்தினபுரி | 24 | 190 |
| | **மொத்தம்** | **54** | **386** |
| தெற்கு | காலி | 41 | 215 |
| | மாத்தறை | 30 | 195 |
| | அம்பாந்தோட்டை | 20 | 99 |
| | **மொத்தம்** | **91** | **509** |

| | | | |
|---|---|---|---|
| ஊவா | பதுள்ள | 30 | 182 |
| | மொணராகலை | 16 | 71 |
| **மொத்தம்** | | **46** | **253** |
| மேற்கு | கொழும்பு வடக்கு | 35 | 92 |
| | கொழும்பு தெற்கு | 23 | 87 |
| | கம்பஹா வடக்கு | 28 | 100 |
| | கம்பஹா தெற்கு | 28 | 134 |
| | களுத்துறை | 34 | 140 |
| **மொத்தம்** | | **148** | **553** |
| வடமேற்கு | குருணாகல் வடக்கு | 22 | 153 |
| | குருணாகல் தெற்கு | 21 | 152 |
| | புத்தளம் | 22 | 114 |
| **உப மொத்தம்** | | **65** | **419** |
| **முழு மொத்தம்** | | **653** | **3410** |

## உப தபால் அலுவலகங்கள் பற்றிய விபரங்கள்

- மொத்த உப தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை 3410
- தற்போது மூடப்பட்டுள்ள உப தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை 41
- கடமைகளை மேற்கொள்ளும் உப தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை 3369
- கடிதங்களை விநியோகிக்கும் உப தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை 1523
- கடிதங்களை விநியோகிக்காத உப தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை 1887
- அரசாங்க கட்டிடங்களின் எண்ணிக்கை 430
- தனியார் கட்டிடங்களின் எண்ணிக்கை 2942

## தபால் சேவைகளை விஸ்தரிப்பதன் அளவுகோல்கள் 2015

| 2015 ஆம் ஆண்டு | |
|---|---|
| வருடாந்தம் ஒரு ஆளுக்கு கிடைக்கின்ற கடிதங்களின் எண்ணிக்கை | 16 |
| ஒவ்வொரு தபால் ஆலுவலகத்தின் மூலமும் சேவை ஆற்றப்படுகின்ற நிலப்பகுதிகள் சதுர கி.மீ. | 13 |
| ஒரு தபால் அலுவலகத்தினால் சேவையாற்றப்படுகின்ற மக்களின் எண்ணிக்கை | 4332 |

## தபால் திணைக்களத்தின் வருமானம்

| ஆண்டு | வருமானம் (ரூ.மில்) | வருமான வளர்ச்சி (%) |
|---|---|---|
| 2010 | 4,572 | -3.6% |
| 2011 | 4,409 | -3% |
| 2012 | 4,952 | 12% |
| 2013 | 5,907 | 19% |
| 2014 | 6,558 | 11% |
| 2015 | 6,711 | 2.3% |




## 2015 ஆம் ஆண்டில் வழங்கிய சேவைகளின் முன்னேற்றம்

| | | வருமானம் ரூபா. | |
|---|---|---|---|
| | விடயம் | 2014ஆம் ஆண்டு | 2015ஆம் ஆண்டு |
| 1 | மொத்த தபால் | 256,800,345 | 315,518,828 |
| 2 | வியாபாரத் தபால் | 1,002,362,830 | 1,021,595,556 |
| 3 | முத்திரை அச்சு இயந்திர வருமானம் | 1,324,054,413 | 1,282,095,954 |
| 4 | உள்நாட்டு அதிவேக தபால் / இலவச தபால் | 110,292,895 | 164,604,583 |
| 5 | வெளிநாட்டு அதிவேக தபால் | 182,509,838 | 207,843,602 |
| 6 | வெளிநாட்டுப் பொதி/ சர்வதேச தபால் | 220,009,806 | 182,481,131 |

| | | | |
|---|---|---|---|
| 7 | முத்திரை | 2,587,579,875 | 2,274,690,043 |
| 8 | காசுக்கட்டளை தரகு | 108,644,884 | 102,032,372 |
| 9 | வேறு தபால் வருமானம் | 32,175,646 | 279,796,047 |
| 10 | மின்சாரசபைக் கட்டணம் சேகரித்தல் | 252,695,160 | 311,743,713 |
| 11 | தேசிய சேமிப்பு வங்கிச் சேவைகள் | 122,418,820 | 132,265,223 |
| 12 | இலங்கைக் காப்புறுதிச் சேவைகள் | 3,317,670 | 5,207,596 |
| 13 | வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம் | 18,294,059 | 26,284,743 |
| 14 | செலிங்கோ காப்புறுதி | - | 404,472 |
| 15 | மொமிடல் பட்டியல் சேகரிப்பு | 2,455,432 | 2,078,654 |
| 16 | டெலிகொம் பட்டியல் சேகரிப்பு | 2,522,225 | 6,313,966 |
| 17 | U GENERATION பட்டியல் சேகரிப்பு | - | 242,482 |
| 18 | டெலிமெயில் சேவை | 44,697,262 | 49,343,466 |
| 19 | வேறு முகவர் சேவைகள் | 147,980,097 | 175,036,307 |
| 20 | வேறு தபால் சேவைகள் வருமானம் | 138,697,105 | 171,300,272 |
| | **மொத்தம்** | **6,557,508,362** | **6,710,879,010.00** |



**2015 ஆம் ஆண்டு பரீட்சைத் திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்ட கணக்குகளிலிருந்து பெறப்பட்ட வருமானம்**

| தவணை | வருமானம் (ரு) |
|---|---|
| 1 ஆம் தவணை | 921,877.00 |
| 2 ஆம் தவணை | 1,971,079.04 |
| 3 ஆம் தவணை | 298,407.20 |
| 4 ஆம் தவணை | 788,928.00 |
| | 3,980,291.24 |

**2015 ஆம் ஆண்டில் புதிய ஒரு நாள் கடித விநியோக சேவையின் கீழ் அதிவேக பஸ் வண்டிகள் மூலம் தபால்களைக் கொண்டு சேல்லல்**

| தபால் அலுவலகம் | பொருட்களின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|
| ம.த.பரிமாற்ற நிலையம் | 11,768 | 1,049,860 |
| காலி | 3,345 | 294,875 |
| மாத்தறை | 1,582 | 128,930 |
| நுகேகொட | 155 | 14,505 |
| மஹரகம | 26 | 1,940 |
| மொத்தம் | 16,876 | 1,490,110 |

**2014 மற்றும் 2015 ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக ஈ.எம்.எஸ் பிரிவு மற்றும் தபால் அலுவலக கருமபீடங்களினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்ட ஈ.எம்.எஸ் பொருட்களின் எண்ணிக்கை மற்றும் தபால் கட்டண வருமானம்**

| மாதம் | 2014 ஆம் ஆண்டு | | 2015 ஆம் ஆண்டு | |
|---|---|---|---|---|
| | ஈ.எம்.எஸ். பொருட்களின் எண்ணிக்கை | தபால் கட்டண வருமானம் | ஈ.எம்.எஸ். பொருட்களின் எண்ணிக்கை | தபால் கட்டண வருமானம் |
| ஜனவரி | 2,639 | 13,217,675.00 | 3,658 | 19,173,250.00 |
| பெப்ரவரி | 2,379 | 11,438,760.00 | 2,782 | 13,230,950.00 |
| மார்ச்சு | 3,018 | 14,752,045.00 | 3,545 | 17,035,025.00 |
| ஏப்ரல் | 3,611 | 18,472,660.00 | 4060 | 21,128,375.00 |
| மே | 3,043 | 14,853,805.00 | 3,296 | 16,287,900.00 |
| ஜூன் | 2,844 | 13,382,270.00 | 3,491 | 16,427,175.00 |
| ஜூலை | 3,082 | 14,731,615.00 | 3,614 | 17,541,600.00 |
| ஆகஸ்ட் | 2,837 | 13,483,210.00 | 3,027 | 15,427,475.00 |
| செப்டம்பர் | 3,123 | 16,167,005.00 | 3,454 | 17,422,525.00 |
| ஒக்டோபர் | 3,241 | 16,323,325.00 | 3,965 | 19,414,150.00 |
| நொவம்பர் | 3,355 | 16,825,050.00 | 3,705 | 18,127,175.00 |
| டிசம்பர் | 3,658 | 19,173,250.00 | 4,266 | 21,429,200.00 |
| **மொத்தம்** | **36,830** | **182,820,670.00** | **42,113** | **207,774,200.00** |

### 2015 ஆம் ஆண்டில் ஈ.எம்.எஸ். தபால் பொருட்களை விநியோகித்ததன் மூலம் பெறப்பட்ட வருமானம்

| தவணை | ஈ.எம்.எஸ். பெருட்களின் எண்ணிக்கை (கடிதம்) | ஈ.எம்.எஸ். பொருட்களின் எண்ணிக்கை (பொதி) | ஈ.எம்.எஸ். கடிதங்களை விநியோகித்ததன் மூலம் கிடைத்த வருமானம் | ஈ.எம்.எஸ். பொதிகளை விநியோகித்ததன் மூலம் கிடைத்த வருமானம் |
|---|---|---|---|---|
| 1ஆம் தவணை | 6,948 | 21,217 | 5,502,816.00 | 25,205,796.00 |
| 2ஆம் தவணை | 6,737 | 21,085 | 5,335,704.00 | 25,048,980.00 |
| 3ஆம் தவணை | 7,027 | 22,213 | 5,565,384.00 | 26,389,044.00 |
| 4 ஆம் தவணை | 7,005 | 23,570 | 5,547,960.00 | 28,001,160.00 |
| **மொத்தம்** | | | **21,951,864.00** | **104,644,980.00** |

### காசுக்கட்டளைகளை விநியோகித்தல்

| வகை | விநியோகிக்கப்பட்ட எண்ணிக்கை | | விநியோகிக்கப்பட்ட தொகை (ரூ) | | | | தரகு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | | 2015 | | 2014 | | 2014 | |
| சாதாரண காசுக்கட்டளை | 366,861 | 283,697 | 1.226,402,389 | 48 | 886,076,848 | 64 | 19,757,208 | 19 | 14,845,426 | 67 |
| தந்தி காசுக்கட்டளை | 34 | - | 101.491 | 17 | - | - | 3இ284 | 50 | - | - |
| பெறுமதி செலுத்தி ஏற்றுக்கொள்ளும் பொதிக் காசுக்கட்டளை | 83,724 | 60,785 | 137,626,939 | 77 | 98,935,961 | 38 | 5,004,368 | 34 | 3,646,295 | 62 |
| பெக்ஸ் காசுக்கட்டளை | 03 | - | 3,000 | 00 | - | - | 85 | 00 | - | - |
| இலத்திரனியல் காசுக் கட்டளை | 1,008,045 | 966,605 | 5,613,857,236 | 11 | 5,622,817,323 | 35 | 84,018,763 | 64 | 83,503,305 | 47 |
| மொத்தம் | 1,458,667 | 1,311,087 | 6,977,991,056 | 53 | 6,607,830,133 | 37 | 108,783,709 | 67 | 101,995,027 | 76 |

### காசுக்கட்டளைகளைச் செலுத்துதல்

| வகை | செலுத்தப்பட்ட எண்ணிக்கை | | செலுத்தப்பட்ட தொகை (ரூ) | |
|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | 2015 |
| சாதாரண காசுக்கட்டளை | 412,537 | 275,088 | 1,524,066,043 | 1,276,413,366 |
| தந்தி காசுக்கட்டளை | 59 | - | 1,764,948 | - |
| பெறுமதி செலுத்தி பொறுப்பேற்றுக்கொள்ளும் பொதிக் காசுக்கட்டளை | 81,428 | 58,344 | 155,105,395 | 106,976,190 |
| பெக்ஸ் காசுக்கட்டளை | 16 | - | 37,825 | - |
| இலத்திரனயில் காசுக்கட்டளை | 965,228 | 928,103 | 5,600,090,625 | 5,849,737,604 |
| வெளிநாட்டுக் காசுக்கட்டளை | 209 | 127 | 11,974,616 | 5,698,130 |
| பிரித்தானிய காசுக்கட்டளை | 427 | 402 | 2,809,448 | 2,304,491 |
| மொத்தம் | 1,459,904 | 1,262,064 | 7,295,848,901 | 7,241,129,782 |

**காசுக்கட்டளை வகைகளில் அனுப்பக்கூடிய உச்சளவான, ஆகக் குறைந்த தொகைகள் மற்றும் செல்லுபடியான கால எல்லை.**

| வகை | ஆகக் குறைந்த தொகை (ரூ) | உச்சளவான தொகை (ரூ) | செல்லுபடியாகும் கால எல்லை |
|---|---|---|---|
| சாதாரணம் | சதம் : 0.01 | 25,000.00 | 06 மாதங்கள் |
| தந்திக் காசுக்கட்டளை | 1.00 | 25,000.00 | 02 மாதங்கள் |
| பெறுமதி செலுத்திப் பொறுப்பேற்கும் பொதிக் காசுக்கட்டளை | 1.00 | 5,000.00 | 06 மாதங்கள் |
| பெக்ஸ் காசுக்கட்டளை | 100.00 | 25,000.00 | 02 மாதங்கள் |
| இலத்திரனியல் காசுக்கட்டளை | 1.00 | 25,000.00 | 06 மாதங்கள் |

**தபாலைக் கொண்டு செல்வதற்காக புகையிரதத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்ட கட்டணங்கள் -ரூபாவில்**

| தவணை | 2014 ஆம் ஆண்டு | 2015 ஆம் ஆண்டு |
|---|---|---|
| **01 ஆம் தவணை** | | |
| ஜனவரி | 1,760,374.56 | 1,670,948.49 |
| பெப்ரவரி | 1,412,934.88 | 1,483,503.90 |
| மார்ச்சு | 1,868,773.76 | 1,846,282.98 |
| **மொத்தம்** | **5,042,083.20** | **5,000,735.37** |
| | | |
| **02 ஆம் தவணை** | | |
| ஏப்ரல் | 1,549,214.24 | 1,576,158.93 |
| மே | 1,670,047.68 | 1,775,078.70 |
| ஜூன் | 1,745,385.60 | 2,044,374.69 |
| **மொத்தம்** | **4,964,647.52** | **5,395,612.32** |
| | | |
| **03 ஆம் தவணை** | | |
| ஜூலை | 1,769,508.16 | 2,115,663.33 |
| ஆகஸ்ட் | 1,868,773.76 | 2,125,494.60 |
| செப்டம்பர் | 1,792,865.76 | 2,121,468.63 |
| **மொத்தம்** | 5,431,147.68 | 6,362,626.56 |
| | | |
| **04 ஆம் தவணை** | | |
| ஒக்டோபர் | 1,619,863.84 | 2,098,163.07 |
| நவம்பர் | 1,726,979.52 | 2,015,916.51 |
| டிசம்பர் | 1,606,032.00 | 2,116,240.53 |
| **மொத்தம்** | 4,952,875.36 | 6,230,320.11 |
| **முழு மொத்தம்** | **20,390,753.76** | **22,989,294.36** |

**தபாலைக் கொண்டு செல்வதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் செலுத்தப்பட்ட கட்டணங்கள் - ரூபாவில்**

| தவணை | 2014ஆம் ஆண்டு | 2015ஆம் ஆண்டு |
|---|---|---|
| வடமேல் | 1,628,222.21 | 1,603,988.23 |
| | 1,639,725.90 | 1,578,519.15 |
| | 1,647,615.69 | 1,645,894.20 |
| | 1,603,988.23 | 1,646,111.47 |
| | **6,519,552.03** | **6,474,513.05** |
| வடக்கு | 348,611.76 | 382,668.00 |
| | 336,522.96 | 382,668.00 |
| | 360,221.76 | 261,904.50 |
| | 362,890.88 | 456,241.50 |
| | **1,408,247.36** | **1,483.482.00** |
| தெற்கு | 1,234,700.28 | 1,262,512.30 |
| | 1,184,027.31 | 1,296,176.37 |
| | 787,909.22 | 1,296,396.38 |
| | 1,235,342.29 | 1,235,342.29 |
| | **4,441,979.10** | **5,090,427.34** |
| கிழக்கு | 1,642,672.25 | 1,627,958.82 |
| | 1,613,492.00 | 1,617,677.88 |
| | 1,647,984.25 | 1,627,466.60 |
| | 1,640,410.03 | 1,671,681.41 |
| | **6,544,558.53** | **6,544,784.71** |
| | | |
| ஊவா | 1,289,720.35 | 1,271,940.61 |
| | 1,294,962.21 | 1,269,992.20 |
| | 1,268,251.41 | 1,283,028.59 |
| | 1,271,874.53 | 1,284,358.20 |
| | 5,124,808.50 | 5,109,319.60 |
| | | |
| சப்ரகமுவ | 2,564,996.25 | 2,579,309.50 |
| | 2,570,905.46 | 2,623,778.50 |
| | 2,647,413.25 | 2,627,981.50 |
| | 2,579,309.50 | 2,695,586.00 |
| | **10,362,624.46** | **10,526,655.50** |
| | | |
| மத்திய | 2,456,722.13 | 2,443,806.75 |
| | 2,380,424.75 | 2,393,281.00 |
| | 2,374,341.75 | 2,367,120.25 |
| | 2,429,523.25 | 2,383,422.25 |
| | **9,641,011.88** | **9,587,630.25** |

| | | |
|---|---|---|
| வடமத்திய | 907,978.50 | 905,476.00 |
| | 907,978.50 | 907,978.50 |
| | 907,978.50 | 906,534.75 |
| | 907,208.50 | 895,108.50 |
| | **3,631,144.00** | **3,615,097.75** |
| மேற்கு | 2,120,148.25 | 2,104,310.97 |
| | 2,117,946.88 | 2,123,587.13 |
| | 2,105,921.13 | 2,134,232.31 |
| | 2,111,045.52 | 2,111,045.52 |
| | **8,455,061.78** | **8,473,175.93** |
| **மொத்தம்** | **56,128,987.64** | **56,905,086.13** |

## திணைக்களத்தின் ஊழியர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஏற்பாடுகள்

| | **பங்கேற்றவர்களின் எண்ணிக்கை** | | **செலவிடப்பட்ட தொகை ரூ.** | |
|---|---|---|---|---|
| | 2014 ஆம் ஆண்டு | 2015 ஆம் ஆண்டு | 2014 ஆம் ஆண்டு | 2015 ஆம் ஆண்டு |
| உள்நாடு | 14,258 | 21,130 | 9,852,726.17 | 16,884,944.31 |
| வெளிநாடு | 33 | 29 | 4,421,568.65 | 4,338,600.09 |
| மொத்தம் | 14,291 | 21,159 | 14,274,294.82 | 21,223,544.40 |

## 2015 ஆம் ஆண்டில் மாகாண ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்பாடுகளை ஒதுக்குவதும் செலவிடுவதும்

| **மாகாணம்** | **2015 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் (ரூ.)** | **2015 ஆம் ஆண்டுக்கு செலவிடப்பட்ட ஏற்பாடுகள் (ரூ.)** |
|---|---|---|
| மேற்கு | 1,269,121.00 | 1,236,609.53 |
| மத்திய | 862,325.00 | 862,322.00 |
| ஊவா | 1,003,661.00 | 1,003,660.16 |
| சப்ரகமுவ | 625,000.00 | 619,010.15 |
| வடமத்திய | 938,000.00 | 937,994.50 |
| வடக்கு | 631,000.00 | 630,067.17 |
| கிழக்கு | 801,000.00 | 796,317.00 |
| வடமேற்கு | 700,000.00 | 688,537.12 |
| தெற்கு | 645,600.00 | 630,301.34 |

| | | |
|---|---|---|
| தபால் முகாமைத்துவப் பயிற்சிக் கல்லூரி | 9,018,293.00 | 9,001,087.12 |
| மத்திய தபால் பரிமாற்ற நிலையம் | 550,000.00 | 479,038.00 |
| மொத்தம் | 17,044,000.00 | 16,884,944.09 |

**தபால் திணைக்களத்தின் ஒட்டுமொத்த நிதி மீளாய்வு – 2015**

| | 2011 ஆம் ஆண்டு (ரூ.மில்) | 2012 ஆம் ஆண்டு (ரூ.மில்) | 2013 ஆம் ஆண்டு (ரூ.மில்) | 2014 ஆம் ஆண்டு (ரூ.மில்) | 2015 ஆம் ஆண்டு (ரூ.மில்) |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 4,409 | 4,952 | 5,907 | 6,558 | 6,711 |
| செலவினம் | 7,745 | 8,258 | 8,766 | 9,541 | 11,756 |
| (குறை) மிகை | (3,336) | (3,305) | (2,859) | (2,984) | (5,045) |

## ஒட்டுமொத்த நிதி மீளாய்வு

2014 ஆம் ஆண்டின் வருமானம் ரூ.மில். 6,558 ஆகுமென்பதுடன், 2015 இன் வருமானம் ரூ.மில். 6,711 ஆகும். அதற்கமைய வருமானத்தின் வளர்ச்சி ரூ.மில். 153 ஆகும்.

அவ்வாறே 2014 ஆம் ஆண்டின் செலவினம் ரூ.மில். 9,541 ஆகுமென்பதுடன் 2015 அம் ஆண்டின் செலவினம் ரூ.மில். 11,756 ஆகும். இதற்கமைய 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவின அதிகரிப்பு ரூ.மில். 2,215 ஆகும். குறைபாடின் அதிகரிப்பு ரூ.மில். 2,062 ஆகும்.

### செலவின மீளாய்வு

1. **மீண்டெழும் செலவின மீளாய்வு**

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் செலவினம் ரூ.மில். 2,215 ஆல் அதிகரித்துள்ளது. இது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 18.8% சதவீதமான அதிகரிப்பாகும். இதற்குப் பிரதானமாக தாக்கம் செலுத்தியிருப்பது 2015 ஆம் ஆண்டில் ஆளுக்குரிய வேதனாதிகள் ரூ.மில். 2,212 இனால் அதிகரித்துள்ளமையாகும். 2015 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் ஊழியர்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டமை இந்த அதிகரிப்புக்குக் காரணமாகியுள்ளது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் செயற்பாட்டுச் செலவினங்களின் வித்தியாசம் ரூ.மில். 3 ஆகும். இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவான செலவினமாகும்.

2015 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவினம் ரூ.மில். 11,759.5 ஆகுமென்பதுடன், பயன்படுத்தப்பட்டவை ரூ.மில். 11,755.6 ஆகும். இது விகிதாசாரமாக 99.9% ஆகும்.

## 2. மூலதனச் செலவின மீளாய்வு

2014 ஆம் ஆண்டின் மூலதனச் செலவினமாக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூ.மில். 146.9 ஆக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டில் இது ரூ.மில். 201.0 ஆகும். 2015 ஆம் ஆண்டின் ஏற்பாடுகளில் ரூ.மில். 196.3 செலவிடப்பட்டுள்ளன. இது விகிதாசார அடிப்படையில் 97.6மூ ஆகும். 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த மூலதனச் செலவினம் அதிகரித்துள்ள போதிலும் இதன் மூலம் தபால் அலுவலகங்களின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை விஸ்த்தரித்தல் போன்வற்றின் மூலம் ஊழியர்களின் சிக்கல்களைக் குறைப்பதற்கும் திணைக்களம் தமது செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு மேலதிக செலவினங்களை அதிகரித்து வகைப்படுத்துவதற்காக பதவியணியின் திறமைகளை வளர்த்து மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வருமான மீளாய்வு

2015 ஆம் ஆண்டின் தபால் திணைக்களத்தின் வருமானம் ரூ.மில். 6,711 ஆகும். 2014 ஆம் ஆண்டில் இது ரூ.மில். 6,558 ஆகும். 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் வருமானம் 153 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது. இது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2.2% வளர்ச்சியாகும்.

பதிவுக் கடிதங்கள் மற்றும் வியாபாரக் கடிதங்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும் 2014 ஆம் ஆண்டில் முத்திரைக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமையும் 2014 ஆம் ஆண்டில் வருமானம் அதிகரிப்பதற்குக் காரணமான போதிலும் 2015 ஆம் ஆண்டில் முத்திரை வருமானத்தில் பின்னடைவு, முத்திரை இயந்திரத்தை வழங்க முடியாது போனமை, 2015 ஆம் ஆண்டின் வருமான விகிதம் குறைவடைய முக்கிய காரணமாக அமைந்துள்ளது. ஏனைய பிரதான வருமானத் தலைப்பிலும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடகையில் அதிகரிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**மொத்த வருமானம்**

| விடயம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | முழு மொத்தம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| தபால் வருமானம் | 3,910,178,163 | 4,424,189,963 | 5,315,115,657 | 5,899,153,630 | 5,949,269,483 | 25,497,906,896 |
| முத்திரைக் கட்டளைத் தரகு | 112,191,703 | 109,265,639 | 110,432,119 | 108,644,884 | 102,032,372 | 542,566,717 |
| தேசிய சேமிப்பு வங்கி சேவைக் கட்டணம் | 112,348,118 | 114,762,214 | 121,893,409 | 122,418,820 | 132,265,223 | 603,687,784 |
| ஏனையவை | 274,210,174 | 304,194,039 | 359,992,104 | 427,291,027 | 527,311,930 | 1,892,999,274 |
| **முழு மொத்தம்** | **4,408,928,158** | **4,952,411,855** | **5,907,433,288** | **6,557,508,362** | **6,710,879,008** | **28,537,160,671** |

**மொத்த வருமானம்**

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தபால் வருமானம் | 88.69% | 89.33% | 89.97% | 89.96% | 88.65% | 89.35% |
| முத்திரைக் கட்டளைத் தரகு | 2.54% | 2.21% | 1.87% | 1.66% | 1.52% | 1.90% |
| தே.சே.வங்கிச் சேவைக் கட்டணம் | 2.55% | 2.32% | 2.06% | 1.87% | 1.97% | 2.12% |
| ஏனையவை | 6.22% | 6.14% | 6.09% | 6.52% | 7.86% | 6.63% |
| **முழு மொத்தம்** | **100.00%** | **100.00%** | **100.00%** | **100.00%** | **100.00%** | **100.00%** |

| **மொத்தச் செலவினம்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** | **முழு மொத்தம்** |
| செயற்பாட்டுச் செலவினம் | 776,170,709 | 848,367,516 | 894,887,537 | 1,038,131,227 | 1,040,518,809 | 4,598,075,798 |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 6,969,255,339 | 7,409,332,481 | 7,871,113,549 | 8,503,357,661 | 10,715,168,034 | 41,468,227,064 |
| **முழு மொத்தம்** | **7,745,426,048** | **8,257,699,997** | **8,766,001,086** | **9,541,488,888** | **11,755,686,843** | **46,066,302,862** |

| **மொத்தச் செலவினம்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** | **முழு மொத்தம்** |
| செயற்பாட்டுச் செலவினம் | 10.02% | 10.27% | 10.21% | 10.88% | 8.85% | 9.98% |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 89.98% | 89.73% | 89.79% | 89.12% | 91.15% | 90.02% |
| **முழு மொத்தம்** | **100.00%** | **100.00%** | **100.00%** | **100.00%** | **100.00%** | **100.00%** |

## மூலதனச் செலவினப் பகுப்பாய்வு

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | மொத்தச் செலவினம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 2001– கட்டிடம் புதுப்பித்தல் | 49,947,584.00 | 60,829,179.00 | 53,897,284.84 | 56,008,208.00 | 59,231,521.10 | 279,913,776.94 |
| 2002– பொறியும் இயந்திர சாதனமும் | 1,596,286.00 | 4,008,570.00 | 6,075,315.37 | 6,189,899.00 | 6,726,561.11 | 24,596,631.48 |
| 2003 –வாகனம் புதுப்பித்தல் | 4,677,203.00 | 6,051,094.00 | 5,573,991.31 | 3,462,958.00 | 5,691,869.45 | 25,457,115.76 |
| 2012-தளபாடமும் அலுவலக உபகரணமும். | 11,944,471.00 | 10,291,637.00 | 11,695,279.65 | 13,920,119.00 | 44,999,999.91 | 92,851,506.56 |
| 2013 –பொறியும் இயந்திரமும் | 6,936,557.00 | 11,448,682.00 | 13,634,477.38 | 13,480,266.00 | 16,861,476.66 | 62,361,459.04 |
| 2101 –வாகனம் கொள்வனவு | 17,091,963.00 | | 78,290,000.00 | | | 95,381,963.00 |
| 2104–புதிய கட்டிடம் | 99,953,315.00 | 31,251,167.00 | 34,999,590.76 | 34,895,784.00 | 39,999,347.00 | 241,099,203.76 |
| 2401 –பயிற்சி, திறன் விருத்தி | 4,339,464.00 | 5,331,826.00 | 8,868,148.66 | 9,852,726.00 | 16,884,944.31 | 45,277,108.97 |
| 2502 - முதலீடு | 4,999,874.00 | 455,000.00 | 5,800,000.00 | 5,986,462.00 | 5,952,163.61 | 23,193,499.61 |
| **மொர்ததச் செலவினம்** | **201,486,717.00** | **129,667,155.00** | **218,834,087.97** | **143,796,422.00** | **196,347,883.15** | **890,132,265.12** |

## வருமானப் பகுப்பாய்வு

| ஆண்டு | தபால் வருமானம் | காசுக் கட்டளைத் தரகு | தே.சே. வங்கிச் சேவைக் கட்டணம் | ஏனையவை | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2004 | 2,136,333,649 | 81,944,307 | 53,625,728 | 113,135,301 | 2,385,038,984 |
| 2005 | 2,448,017,459 | 40,750,155 | 59,005,270 | 96,870,153 | 2,644,643,036 |
| 2006 | 2,319,998,583 | 151,858,873 | 68,063,394 | 141,954,986 | 2,681,875,836 |
| 2007 | 3,610,959,879 | 114,920,085 | 79,951,286 | 175,909,775 | 3,981,741,025 |
| 2008 | 4,399,890,482 | 114,691,492 | 93,743,854 | 159,945,074 | 4,768,270,902 |
| 2009 | 4,180,214,403 | 125,224,934 | 96,946,327 | 143,461,593 | 4,545,847,257 |
| 2010 | 4,161,083,650 | 106,589,954 | 107,383,604 | 197,206,016 | 4,572,263,224 |
| 2011 | 3,910,178,163 | 112,191,703 | 112,348,118 | 274,210,174 | 4,408,928,158 |
| 2012 | 4,424,189,963 | 109,265,639 | 114,762,214 | 304,194,039 | 4,952,411,855 |
| 2013 | 5,315,115,657 | 110,432,119 | 121,893,409 | 359,992,104 | 5,907,433,288 |
| 2014 | 5,899,153,630 | 108,644,884 | 122,418,820 | 427,291,027 | 6,557,508,362 |
| 2015 | 5,812,686,888 | 102,032,372 | 80,637,043 | 527,297,260 | 6,522,653,563 |

*தபால் திணைக்களத்தின் வருமானச் செலவின விபரம் இணைப்பு 03 மற்றும் 04 என இணைக்கப்பட்டுள்ளது.

## 2015ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகள் பற்றிய விபரம்

| | பரீட்சையின் பெயர் | நடாத்தப்பட்ட திகதி |
|---|---|---|
| 01 | கட்டிடப் பரிசோதகர் திறந்த/ போட்டிப் பரீட்சை | 2015.05.31 |
| 02 | தபால் சேவைகள் அலுவலர் IIIஇற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை (578 வெற்றிடங்களை நிரப்புவதற்கு) | 2015.11.28 |
| 03 | இணைந்த தபால் சேவை ‘ஆ’I ‘ஆ’ தரத்தைச் சேர்ந்த தபால் சேவைகள் அலுவலர் பதவிகளுக்கு பதவி உயர்த்துவதற்காக கனிஷ்ட ஊழியர்கள் மற்றும் உப தபால் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012 (2014) பரீட்சைக்கு 2015.10.09 ஆம் திகதி விண்ணப்பங்கள் கோருதல். | எதிர்காலத்தில் நடாத்தப்படவுள்ளது. |

## நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் விபரம் - 2015

| | நேர்முகப் பரீட்சைகளின் பெயர் | நடாத்தப்பட்ட திகதி |
|---|---|---|
| 02 | உதவி அத்தியட்சகர்/ உதவி நிருவாகச் செயலாளர் பதவிகளுக்கு பதவி உயர்த்துகின்ற பரீட்சையில் சித்தியடைந்த 11 பேருக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு நியமனங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 2015.02.19 |
| 03 | கட்டிடப் பரிசோதகர்களுக்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015 | 2015.11.11 |

## 2015ஆம் ஆண்டின் புலனாய்வு மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள்

தபால் திணைக்களத்தின் புலனாய்வு மற்றும் கணக்காய்வு அலுவல்கள் கட்டுப்பாட்டு (புலனாய்வு) அலுவலகம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. தபால் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு (புலனாய்வு) அலுவலகம், மத்திய தபால் பரிமாற்று நிலையம் மற்றும் 09 மாகாணம் உள்ளடங்கலாக 11 அலுவலகங்களின் மூலம் ஆரம்ப புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

| | |
|---|---|
| 2015.01.01 ஆம் திகதிக்கு கையில் எஞ்சியுள்ள ஆரம்ப புலனாய்வு எண்ணிக்கை | 2582 |
| 2015 ஆம் ஆண்டில் ஆரம்ப புலனாய்வு நடவடிக்கைகளுக்கு கிடைத்த எண்ணிக்கை | 1089 |
| | 3671 |
| 2015 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டஎண்ணிக்கை | 978 |
| பூர்த்தி செய்யப்பட்ட ஆரம்ப புலனாய்வு நடவடிக்கைகளின் விகிதம் | 26% |

| | |
|---|---|
| 2015.01.01 ஆம் திகதிக்கு முன்கொண்டுவரப்பட்ட முறையான விசாரணைகளின் எண்ணிக்கை | 50 |
| ஆண்டினுள் முறையான விசாரணைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை | 15 |
| | 65 |
| 2015 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்ட எண்ணிக்கை | 21 |
| நிறைவுசெய்யப்பட்ட முறையான விசாரணைகளின் விகிதம் | 32% |

## 2015 ஆம் ஆண்டின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அலுவலகங்கள்

| | |
|---|---|
| சிறப்புத் தர தபால் அலுவலகங்கள் | 11 |
| 1 தர தபால் அலுவலகம் | 27 |
| 11 தர தபால் அலுவலகம் | 51 |
| தொடர்பாடல் நிலையம் | 08 |
| வேறு அலுவலகங்கள் | 06 |

## 2015 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்ட புதிய கட்டிடங்கள்

| மாகாணம் | பிராந்திய தபால் அத்தியட்சகர் | தபால் அலுவலகம் | திறந்துவைத்த திகதி |
|---|---|---|---|
| வடமேல் | புத்தளம் | மதுரங்குளி | 2015.03.12 |
| மத்திய | நுவரேலியா | தலவாகலை | 2015.06.15 |
| | | கோமர | 2015.06.09 |
| மேற்கு | கொழும்பு வடக்கு | சீத்தாவகபுர | 2015.03.10 |
| தெற்கு | காலி | இமதுவ | 2015.11.21 |

## மாகாண பிரதித் தபால்மா அதிபர் பிரிவுகளின் கட்டிடங்களைப் புதுப்பித்தல் மற்றும் புனரமைப்புச் செய்வதற்குச் செலவிடப்பட்ட ஏற்பாடுகள்

| | விபரம் | செலவிடப்பட்ட தொகை (ரூ.மில்) |
|---|---|---|
| 01 | தென் மாகாண 29 அலுவலகங்களைப் புதுப்பித்தல் | 4.866245 |
| 02 | மேல் மாகாண 11 அலுவலகங்களைப் புதுப்பித்தல் | 6.385825 |
| 03 | மத்திய மாகாண 16 அலுவலகங்களைப் புதுப்பித்தல் | 4.266770 |

| | | |
|---|---|---|
| 04 | கிழக்கு மாகாண 13 அலுவலகங்களைப் புதுப்பித்தல் | 5.302906 |
| 05 | ஊவா மாகாண 7 அலுவலகங்களைப் புதுப்பித்தல் | 3.735172 |
| 06 | சப்ரகமுவ மாகாண 11 அலுவலகங்களைப் புதுப்பித்தல் | 2.735817 |
| 07 | வடமத்திய மாகாண 9 அலுவலகங்களைப் புதுப்பித்தல் | 3.282408 |
| 08 | வடமேல் மாகாண 19 அலுவலகங்களைப் புதுப்பித்தல் | 3.282408 |
| 09 | வட மாகாண 11 அலுவலகங்களைப் புதுப்பித்தல் | 4.220353 |
| 10 | மத்திய தபால் பரிமாற்று நிலையத்தைப் புதுப்பித்தல் | 6.087925 |
| 11 | தபால் தலைமையகத்தின் மூலம் புதுப்பித்தல்கள் | 11.830998 |
| 12 | நாராயன்பிட்ட கணக்குகள் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட புதுப்பித்தல்கள் | 2.094002 |
| | **மொத்தச் செலவினம்** | **59.231521** |

## 2015 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடங்கள்

### பிரதான சேவைகள்

| மாகாணம் | பிரதான தபால் அத்தியட்சகர் | தபால் அலுவலகம் | மதிப்பீடு (ரூ.மில்) | 2015 ஆம் ஆண்டில் வழங்கிய ஏற்பாடு (ரூ.மில்) | 2015 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ஏற்பாடு (ரூ.மில்) | வேறு |
|---|---|---|---|---|---|---|
| வடமத்திய | அனுராதபுரம் | அனுராதபுரம் தபால் தொகுதி (கட்டம் II) | 155.00 | 12.448266 | 12.448266 | கட்டம் II நிறைவுசெய்யப்பட்டுள்ளது |
| தெற்கு | காலி | இமதுவ | 9.22 | 1.297208 | 1.297208 | திறந்து வைக்கப்பட்டுள்ளது |
| | மாத்தறை | ஹக்மணை | இல்லை | இல்லை | இல்லை | மாவட்ட செயலாளர், மாத்தறை ஊடாக நிர்மாணிப்பு மேற்கொள்ளப் படுகிறது. |
| மேற்கு | கொழும்பு வழக்கு | சீத்தாவகபுர | 43.10 | 0.049600 | 0.049600 | திறந்துவைக் கப்பட்டுள்ளது |
| மத்திய | நுவரேலியா | தலவாக்கலை | 16.24 | 0.130000 | 0.130000 | திறந்துவைக் கப்பட்டுள்ளது |
| ஊவா | பதுள்ள | எல்ல | 12.02 | 1.998661 | 1.998661 | நிர்மாணிக்கப் படுகிறது. |

### திணைக்களச் சேவைகள்

1. வியாபாரக் கடித தபால் சேவை

வியாபார நிறுவனங்களின் வியாபார நடவடிக்கைகளை நோக்காக் கொண்டு வாடிக்கையாளர்களுக்கு தபாலில் அனுப்புகின்ற கடிதங்களை முறையாகவும் இலகுவாகவும் அனுப்புவதற்கு வசதிகள் செய்யும் வகையில் வியாபார சமுதாயத்தினரைத் தொடர்ந்தும் சேவையில் பிடித்து வைத்துக்கொள்ளும் நோக்கத்தில் 2003 ஆம் ஆண்டில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.[1]

2. சர்வதேச கடுகதி தபால்(EMS)

தொழில்நுட்பம் அபிவிருத்தியடைவதையடுத்து முழு உலகமும் விஸ்வ கிராமமாக மாறியதன் காரணமாக தபால் பொருட்களை வேகமாகவும் பாதுகாப்பாகவும் நம்பகத்துடனும் உலகின் அனைத்து இடங்களுக்கும் கொண்டு சென்று கையளிப்பதற்காக உருவாக்கப்பட்ட சேவையாகும்.

3. உள்நாட்டுக் கடுகதித் தபால் (Speed Post)
துரித மக்கள் சேவையை எதிர்பார்க்கின்ற உள்நாட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவது இந்த சேவையின் பிரதான நோக்கமாகும். பொருட்களைப் பொறுப்பேற்றல், பரிமாற்றம் மற்றும் விநியோகம் ஆகிய மூன்று சந்தர்ப்பங்களிலும் இந்த சேவைக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

4. Speed Post சேவைக்கான போக்குவரத்து மற்றும் விநியோக நடவடிக்கைகள் நவீன மயப்படுத்தப்பட்டு Speed Post கூரியர் சேவை எனும் வியாபார பெயரின் கீழ் 2013.10.01 ஆம் திகதி முதல் இந்த சேவை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் பிரதான நிலையமாக கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையம் செயற்படுகிறது. பிரதேச ரீதியாக உப நிலையங்கள் 10 தாபிக்கப்பட்டுள்ளன.

5. மொத்த தபால் சேவை
மொத்தமாக தபாலை அனுப்புகின்றவர்களுக்கு, அவர்களுக்கு மாதாந்தம் செலவாகின்ற தபால் கட்டணத்திற்கு சமமாகத் திருப்பிச் செலுத்தப்படுகின்ற மாதாந்த வைப்புத் தொகையைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்குப் பதிவு இலக்கம் வழங்கப்படுகிறது. முத்திரியை ஒட்டாது அல்லது முத்திரை இயந்திரத்தின் முத்திரைகளைப் பதிக்காது மேற்படி பதிவு இலக்கத்துடன் தபால் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை அச்சிட்டு கடிதங்களை தபாலின் மூலம் இதற்கமைய அனுப்ப முடியும்[2]

6. காசுக் கட்டளைச் சேவை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள காசுக்கட்டளைச் சேவைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

சாதாரண காசுக்கட்டளைச் சேவை
தந்திக் காசுக்கட்டளைச் சேவை
பெறுமதி செலுத்திப் பெற்றுக்கொள்ளும் காசுக்கட்டளைச் சேவை
பெக்ஸ் காசுக்கட்டளைச் சேவை
இலத்திரனியல் காசுக்கட்டளைச் சேவை
பிரித்தானிய காசுக்கட்டளைகளைச் செலுத்தல்

7. இலத்திரனியல் வணிகம் ( E – Commerce)
திணைக்களத்தின் சேவைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் இணையத்தளம், கையடக்கத் தொலைபேசி ஊடாக மேற்கொள்வது இதற்கமைய இடம்பெறுகின்றது.

[1]2005 செயலாற்றுகை அறிக்கை, பக்கம் 07
[2]2005 இன் செயலாற்றுகை அறிக்கை, பக்கம் 08

8. டெலிமெயில் சேவை

2001.04.02 ஆம் திகதி முதல் தபால் அலுவலகங்களின் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சேவை 2002.10.09 ஆம் திகதி முதல் உப தபால் அலுவலகங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. 150 வருடங்களுக்கும் அதிக காலம் மக்களின் அவசர செய்திகளை அனுப்புவதற்காக பயன்படுத்தப்பட்டு வந்த தந்திச் சேவை 2013.09.30 ஆம் திகதி நிறைவுசெய்யப்பட்டதையடுத்து டெலிமெயில் சேவை 2013.10.01 ஆம் திகதி முதல் மென்மேலும் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

9. பெக்ஸ் சேவை
10. தபால் அடையாள அட்டைகளை விநியோகித்தல்
11. விசேட சேவைகள் - தபால் பெட்டி, தபால் பொதி, தபால் புத்தகங்கள்
12. சாதாரண தபால் சேவை நடவடிக்கைகளுக்குப் புறம்பாக தொடர்பாடல் நிலையம் நவீன சந்தைப்படுத்தல் மற்றும் நவீன தொழில்நுட்பத் தொடர்பாடல் முறைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு அந்தச் சேவைக்கு உதவக்கூடிய பல்வேறு பொருட்கள், சேவைகளை புதிய தோற்றத்துடன் ஆற்றுவதை நோக்காகக் கொண்ட சேவை இதுவாகும். முதலாவது தொடர்பாடல் நியைம் பேருவளை தபால் அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட வகையில் 2002 ஜனவரி மாதம் 27 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## முகவர் சேவைகள்

1. தேசிய சேமிப்பு வங்கியின் நடவடிக்கைகள்
2. வெஸ்டன் யூனியன்
   வெஸ்டன் யூனியன் நிறுவனத்தினால் வெளிநாட்டு நிதியை நாட்டிலுள்ள சகல தபால் அலுவலகங்களினூடாகவும் பொதுமக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் வசதிகள் 2009.01.01 அம் திகதி முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டது[3].
3. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தவணைப் பணத்தைக் கையேற்றல்
4. வாகன தண்டப்பணம் அறவிடல்
5. மின்சாரப் பட்டியலை அறவிடல்
6. பரீட்சைக் கட்டணங்களை அறவிடல்
7. மொபிடல் பட்டியல்களை அறவிடல்
8. கமநல ஓய்வூதியம் செலுத்துதல்
9. மீனவர் ஓய்வூதியம் செலுத்துதல்
10. சமூகப் பாதுகாப்பு நிதியைச் செலுத்துதல்.

## இலவசமாக ஆற்றப்படுகின்ற சேவைகள்

ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் சமூக சேவைத் திணைக்களம் சார்பாக மக்களின் நலன்புரிக்காக கீழே குறிப்பிடப்படுகின்ற பணிகளுக்க தபால் திணைக்களம் தமது ஏற்பாடுகைளச் செலவிட்டு இலவசமாக சேவையாற்றுகின்றது[4].

ஓய்வூதியம் செலுத்தல்
பொதுமக்களுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு
காசநோய்/ புற்றுநோய்/ குஸ்தரோகம் போன்றவற்றுக்கான உதவிகளைச் செய்வதற்கு பங்களிப்புச் செய்தல்.
சமூகப் பாதுகாப்பு நிதியைச் செலுத்துதல்

*இதற்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலவச தபால் வசதிகளை வழங்குதல்.

## 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய சேவைகள்

[3]2009 செயலாற்றுகை அறிக்கை, பக்கம் 14
[4]2003 செயலாற்றுகை அறிக்கை

- செலிங்கோ 3 ஆம் தரப்பினருக்கான வாகனக் காப்புறுதி தவணைப் பணங்களைச் சேகரித்தல்.
- முன் கொடுப்பனவு வசதிகள் - ஹச், எட்டிசலாட், எயர்ரெல்
- தேசிய சேமிப்பு வங்கி வெளிநாட்டு நாணய அனுப்பு தொகைகள் தபால் அலுவலகம் மூலம் செலுத்தும் சேவை.
- ஹைபிறிட் டெலிமெயில் சேவை செலிங்கோ காப்புறுதிக் கம்பனியின் காப்புறுதித் தவணைப் பணம் மற்றும் காப்புறுதிச் சான்றிதழ்களை தபால் அலுவலக வலையமைப்பினூடாக பொதுமக்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
- ர்பைறயல Speed Post சேவை – தெற்கு நெடுஞ்சாலையைப் பயன்படுத்தி அதனூடாக ஒரு நாள் கடுகதி கடிதங்களை விநியோகிக்கும் சேவை காலி, மாத்தறை மற்றும் கொழும்புக்கிடையே 2015 பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டமை
- 3.UGEN தபால் முற்கொடுப்பனவுச் சேவைகள் தபால் அலுவலக வலையமைப்பினூடாக அமுல்படுத்தப்படல்.

## 2015 ஆம் ஆண்டில் ஆரம்ப நடவடிக்ககைள் முன்னெடுக்கப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் அறிமுகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ள புதிய சேவைகள்

1. வெளிநாட்டிலுள்ள இங்கையர்கள் தேசிய சேமிப்பு வங்கி ஊடாக அனுப்புகின்ற நிதியை தபால் திணைக்கள வலையமைப்பினூடாக பயனாளிகளுக்குச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.
2. நீர்ப் பட்டியல்களைச் செலுத்துவதை தபால் அலுவலக வலையமைப்பினூடாக மேற்கொள்ளல் (மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது).
3. E- Channeling PLC நிறுவனத்துடன் இணைந்து தபால் அலுவலக வலையமைப்பினூடாக மருத்துவ சேவை வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் (மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது)
4. சம்பத் வங்கியுடன் பணப் பரிமாற்ற முறையியலை தபால் அலுவலக வலையமைப்பினூடாக அமுல்படுத்தல்.
5. சணச காப்புறுதிக் கம்பனியின் காப்புறுதிச் சான்றிதழ், தவணைப் பணத்தை தபால் அலுவலகங்கள் ஊடாக அறவிடுதல்.
6. கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியின் ஆயுள் உறுதித் தவணைப் பணங்களை தபால் அலுவலகம் ஊடாக அறவிடுதல்
7. சிலிங்கோ காப்புறுதிக் கம்பனியின் ஆயள் உறுதித் தவணைப் பணத்தை தபால் அலுவலகம் ஊடாக அறவிடுதல்.
8. நவீன தொடர்பாடல்தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சேவைகளை அறிமுகம் செய்தல் மற்றும் தற்போதுள்ள சேவைகளின் வினைத்திறனை வளர்த்தல்.
9. வாகன தண்டப்பணங்களைத் துரிதமாக அறவிடுதல்.
10. பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளுக்கு E-Pay சேவையைப் பெற்றுக்கொடுத்தல்.

## எதிர்காலத் திட்டங்கள்

1.செயலாற்றுகையை அடிப்படையாக்க கொண்ட ஊக்குவிப்பு முறையியலை அமுபடுத்துவதன் மூலம் சுமார் 20 சதவீதத்தினால் முகவர் சேவை வருமானத்தை வளர்ததுக்கொள்ளுதல்.

தபால் திணைக்களம் அறிமுகம் செய்துள்ள புதிய சேவைகள் மற்றும் புதிய வியாபார முகவர் சேவைகள் மூலம் தற்போது மக்களுக்கு உயர் மட்டச் சேவைகளும் நிறுவனத்திற்கு இலாபகரமான பயன்களையும் அடைந்துகொள்ளும் வாய்ப்பு உருவாகியிருப்பதுடன் இதற்கு தபாற்காரர்களின் நேரடிப் பங்களிப்பும் கிடைத்துள்ளது.

தபால் திணைக்களம் 2015 ஆம் ஆண்டில் வருமான இலக்கை நிறைவுசெய்துகொள்ளும் போது முகவர் சேவை வருமானம் தொடர்பில் கூடுதல் அக்கறை செலுத்தப்பட்டது. இங்கு நாளாந்தம் ஒவ்வொரு வீட்டிற்கும் செல்லுகின்ற ஒரே அரச ஊழியராகவுள்ள தபாற்காரரின் முனைப்பான பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அரச திணைக்களம் ஒன்றுடன் பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் வாடிக்கையாளர் பயன்பாட்டு பட்டியல்கள் (மின் பட்டியல், ரெலிகொம் நிறுவன தொலைபேசிப்பட்டியல், வேறுபட்டியல்கள் மற்றும் நீர்ப் பட்டியல்), தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கிற்கு நிதியை செலவு வைத்தல் போன்ற நடவடிக்கைகளில் தபாற்காரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இங்கு தபாற்காரர் வீடுகளுக்குச் சென்று செலுத்த வேண்டியுள்ள வாடிக்கையாளர்களின் பயன்பாட்டுப் பட்டியல்களைப் பெற்றுக்கொண்டு கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக தபால் அலுவலக கருமபீடத்திற்குச் சமர்ப்பிப்பது இடம்பெறுகிறது.

இந்த செயன்முறையை முறையான வகையில் அமுல்படுத்துவதற்காக தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் திணைக்களத்தின் சிற்றூழியர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பின் ஆ பிரிவில் (தபாற்காரர் பிரமாணக் குறிப்பு-1981)/Post Office Rule (1980) குறிப்பிடப்பட்டுள்ள தபாற்காரருக்கு வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பொறுப்பேற்றுக்கொள்ளக் கூடிய உச்சளவான தொகை நாளொன்றுக்கு ரூபா. 25/- எனும் வரையறை (இந்த வரையறை விதிக்கப்பட்டிருப்பது சுமார் 33 வருடங்களுக்கு முன்னராகும்) தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு நாளொன்றுக்கு ரூபா 20,000/- வரை திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய அரசாங்க நிதி தொடர்பிலுள்ள அபாய நிலைகளைக் குறைத்துக் கொள்வதற்காக தபாற்காரர் ஒருவருக்கு வாடிக்கையாளரிடம் பெற்றுக்கொள்ளக் கூடிய நிதியின் வரையறை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து காப்புறுதி செய்துகொள்ளப்படுகிறது.

இங்கு வருமானத்தைச் சேகரிக்கும் செயன்முறைக்கு தபாற்காரரின் முனைப்பான பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் போது ஊக்குவிப்பு முறையொன்றின் மூலம் அவரை ஊக்குவிப்பதன் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக அவ்வவ் அலுவலரின் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்பு முறையொன்று ஒட்டுமொத்த தபால் பதவியணியினருக்கும் அறிமுகம் செய்யப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டதுடன், சுமார் 24,000 ஆகவுள்ள இந்தப் பதவியணியினருக்கு இந்த முறையை ஒரே தடவையில் அமுல்படுத்துவது நடைமுறைக்குச் சாத்தியமானதாக இருக்காது.

அதற்கமைய செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்பு முறை கீழே குறிப்பிடப்பட்டுள்ள 03 கட்டங்களின் கீழ் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டிருப்பதுடன், அதற்குத் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டது.

1. முதலாம் கட்டம் - தபாற்காரர்களுக்கு
2. இரண்டாம் கட்டம் - தபால் நிலையப் பொறுப்பதிகாரி/ உப தபால் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட தபால் அலுவலகங்களின் பதவியணியினர்
3. மூன்றாம் கட்டம் - நிருவாக/கணக்குகள் /தபால் தலைமையக/மத்திய தபால் பரிமாற்ற நிலையம்

இதன் போது முற்கட்டத்தின் கீழ் தபாற்காரர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு தாபனப் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசியசம்பளங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் 2015.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அத்திட்டத்தை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதற்கட்டத்தின் கீழ் தபாற்காரர்களுக்கு இவ்வாறான ஊக்குவிப்புக் கொடுப்பனவைச் செலுத்துவதன் ஊடாக அடுத்துவரும் 05 வருடங்களில் வருடாந்தம் சுமார் 20 சதவீதத்தினால் முகவர் சேவை வருமானத்தை வளர்த்துக்கொள்ள எதிர்பார்ப்பதுடன், 2015 ஆம் ஆண்டில் முகவர் சேவைக் கட்டண வருமானத்தின் இலக்குகளை தாண்டிச் சென்று தபால் திணைக்களம் வருமானத்தை உழைத்துக்கொண்டுள்ளது.

**2015 ஆம் ஆண்டின் முகவர் சேவைக் கட்டண வருமானம் ரூபா. 659,577,153.44**

| ஆண்டு | முகவர் சேவைக் கட்டண வருமானம் ரூபா. |
|---|---|
| 2011 | 386,401,871.00 |
| 2012 | 418,956,246.00 |
| 2013 | 478,490,471.00 |
| 2014 | 547,161,236.00 |
| 2015 | 656,593,483.00 |

2. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தபால் சேவைகளை மென்மேலும் முறையாகவும் வினைத்திறனுடனும் தரமாகவும் மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதும் தற்போது தபால் திணைக்களத்தினால் ஆற்றப்படுகின்ற பலதரப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை மென்மேலும் நல்ல முறையில் மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்குமாக தபால் சேவையை புதுப்பொழிவுடன் ஒழுங்குபடுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை (Postal Transformation) அமுல்படுத்தல்.

இதன் போது பின்வரும் துறைகள் சம்பந்தமாக பரந்தளவில் கவனம் செலுத்தப்பட்டது.

சகல அரச மற்றும் நிதிக் கம்பனிகளுக்கும் தேவையான முகவர் சேவைகளை ஆற்றுதல்.

கடுகதித் தபாலை வலுவூட்டுதல்.

வியாபாரத் தபால் சர்வதேச தபால் நடவடிக்கைகளுடன் இணைந்ததாக (E – Commerce) சேவைகளை ஆற்றுதல்.

தபால் வலையமைப்பினூடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம்

வியாபார தபால் சேவையை மேம்படுத்தல்.

பொதி மற்றும் விநியோகச் சேவைகள் (Logi Post)

கூரியர் சேவையை விஸ்தரித்தல்

3 முத்திரைத் தபால் கட்டணங்களுக்கும் அப்பால் சென்றதும் அவ்வாறே அதனைச் செலுத்துவதற்கு மாத்திரம் எனும் நடைமுறையை கலாசார, சமூக, பொருளாதார மற்றும் கலைத்துவப் பெறுமதியின் அடிப்படையில் ஆற்றக்கூடிய சேவையாக விஸ்தரிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதற்கு விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

4. உப தபால் அலுவலகங்களுக்குப் புதிய வியாபார முறையியல் ஒன்றை அறிமுகம் செய்தல்.

## மத்திய தபால் பரிமாற்ற நிலையம்

இலங்கை தபால் சேவையின் பிரதான தபால் நடவடிக்கை நிலையமாக மத்திய தபால் பரிமாற்று நிலையம் உள்ளது. இலங்கைத் தபால் திணைக்களத்தின் பிரதான தபால் பொருட்களைப் பரிமாற்றம் செய்யும் நிலையமாகவும் இது உள்ளது. தபால் செய்யப்படுகின்ற சகல வகையிலுமான இலங்கையின் மற்றும் வெளிநாட்டு தபால் பொருட்களைச் சேகரித்தல், தெரிவுசெய்தல், கொண்டுசெல்லல், விநியோகித்தல் மற்றும் அவற்றின் பயன் முடிவுகளுக்கு அனுப்புதல் போன்ற சகல பிரிவுகள் சம்பந்தமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக தபால் நடவடிக்கைகள் மத்திய தபால் பரிமாற்று நிலையத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. இது பிரதித் தபால்மா அதிபர் (நடவடிக்கை) யின் கண்காணிப்பின் கீழ் தபால் அத்தியட்சகர் ஒருவரினால் நிருவகிக்கப்படுகிறது.

மத்திய தபால் பரிமாற்று நிலையம் பிரதானமாக ஐந்து பிரிவுகளின் கீழ் இயங்கி வருவதுடன், ஒவ்வொரு பிரிவுக்கும் உதவி அத்தியட்சகர் ஒருவர் நிருவாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகச் செயற்பட்டு வருகின்றனர்.

உள்நாட்டுத் தபால் பிரிவு
வெளிநாட்டுத் தபால் பிரிவு
பதிவுத் தபால் பிரிவு
பொதிகள் பிரிவு
நிருவாகப் பிரிவு

- **உள்நாட்டுத் தபால் பிரிவு**

மத்திய தபால் பரிமாற்று நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் அதிகமானவை உள்நாட்டுத் தபால் பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அத்தியட்சகர் (மத்திய தபால் பரிமாற்று நிலையம்) இன் கண்காணிப்பின் கீழ் உள்நாட்டுத் தபால் பிரிவு உதவி அத்தியட்சகர் (உள்நாட்டுத் தபால்/ வர்த்தகம்) இனால் வழிநடாத்தப்படுகின்றது.

இதன் பிரதான பிரிவுகள் பின்வருமாறாகும் -

முத்திரையிடும் அறை
தபால் அறை
சிரேஷ்ட பரிசோதனைப் பிரிவு
தபால் நிலையப் பொறுப்பதிகாரி (கனிஷ்ட ஊழியர் பிரிவு)
தபால் பெட்டிகள் பிரிவு
பொதி எழுதுநர் பிரிவு
கடிதங்களைத் திருத்தியனுப்பும் பிரிவு
நடவடிக்கை ஒழுங்குபடுத்தல் அலுவலர் பிரிவு
நடவடிக்கை ஒழுங்குபடுத்தல் அலுவலர் (த.பெ.பி.)
சிரேஷ்ட ஒப்புநோக்கல் அலுவலர் பிரிவு
வர்த்தகர் பிரிவு

## வர்த்தகப் பிரிவு

தொழில்நுட்பத் தொடர்பாடலின் முன்னேற்றத்தையடுத்து பாரம்பரிய ரீதியாகக் காணப்பட்ட ஆட்களுக்கிடையிலான கடிதப் பரிமாற்றம் தற்போது பொதுமக்களிலிருந்து தூரமாகி வருவதுடன் வியாபார சமூகம் தமது வர்த்தக நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அதிகளவில் தபாலைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டு வருவது தெளிவாகின்றது. எனவே, தபால் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகினற் வர்த்தகச் சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவகையில் தபாலை நவீனமயப்படுத்தி வினைத்திறனும் உற்பத்தித் திறனும் மிக்க சேவையைப் பெற்றுக்கொடுப்பதற்காக இந்தப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பின்வரும் பிரிவுகள் இதன் கீழ் இயங்கி வருகின்றன:

வியாபார தபால் பிரிவு
மொத்த தபால் பிரிவு
கடுகதிப் பிரிவு
தபால் முத்திரைப் பிரிவு
உரித்தாகாத கடித அலுவலகம்
தபால் அலுவலகம்
காசாளர் பிரிவு

### வியாபார தபால் பிரிவு

வியாபாரத் தேவைகளை மையமாகக் கொண்டு வியாபார நிறுவனங்களினால் தமது வாடிக்கையாளர்களான மக்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படுகின்ற கடிதங்களை முறையாக அனுப்புவதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுத்தல் மற்றும் அதன் மூலம் வர்த்தகச் சமூகங்களை மென்மேலும் தபாலை நோக்கிக் கவர்ந்தெடுக்கும் நோக்கத்துடன் இந்தப் பிரிவு 2003 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பிரிவின் மூலம் நாட்டிலுள்ள முதற்தர நிறுவனங்களுக்கு வியாபாரக் கடிதங்களை பிற்கொடுப்பனவு அடிப்படையில் தபாலில் அனுப்பும் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருப்பதுடன், அதற்காக குறித்த நிறுவனங்களிடமிருந்து மாதாந்தம் அனுப்பப்படுகின்ற தபால் கட்டணங்கள் பெற்றுத்தரப்படுவதுடன், பணம் அல்லது வங்கிப் பிணையின் அடிப்படையில் BM மற்றும் M ஆகிய இலக்கங்களின் கீழ் இந்தப் பிரிவின் மூலம் கடிதங்கள் பொறுப்பேற்கப்படுகின்றன.

BMஇலக்கத்தின் கீழ் 13 நிறுவனங்களுக்கும் M இலக்கத்தின் கீழ் 22 நிறுவனங்களுக்கும் 2015 ஆம் ஆண்டில் இந்தப் பிரிவிடமிருந்து சேவை வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக அரச நிறுவனங்களிலிருந்து இலவச தபால் வசதிகளின் கீழ் 20 நிறுவனங்களின் கடிதங்களைப் பெற்றுக்கொள்வது முன்கட்டணத்தின் அடிப்படையில் மொத்தமாக கடிதங்களைத் தபால் செய்யும் நிறுவனங்களுக்குத் தபால் தலைமையத்தினூடாக மேற்கொள்ளும் கொடுப்பனவுகளுக்கு ஏற்புடைய கடிதங்களை மொத்தமாக பொறுப்பேற்றுக்கொள்வதும் இந்தப் பிரிவின் மூலம் இடம்பெறுகின்றது. தபால் திணைக்களத்திற்கு பெருமளவு வருமானம் இந்தப் பிரிவினூடாகச் சேகரிக்கப்படுவதுடன், இந்தப் பிரிவின் மாதாந்தக் கடிதக் கொள்ளவு 6 மற்றும் 8 மில்லியனுக்கு இடைப்பட்டதாகவுள்ளது. அதன் மாதாந்த மொத்த வருமானம் 100 முதல் 120 மில்லியன் ரூபா வரை காணப்படுகிறது.

2015 ஆம் ஆண்டில் வர்த்தக தபால் பிரிவின் கடித ஆற்றல்கள்

| சேவை | நிறுவனங்களின் எண்ணிக்கை | கடிதங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வியாபார மொத்தத் தபால் | 13 | 67,869,914 |
| மொத்தத் தபால் (பிந்திய கட்டண முறை) | 22 | 11,762,815 |
| இலவச தபால் வசதி (ஏற்பாடுகளின் அடிப்படையில்) | 20 | 577,566 |
| தபால் வசதிகள் (கட்டணம் செலுத்தியது) | | 2,127,505 |
| மொத்தம் | 55 | 82,337,800 |

### மொத்தத் தபால் பிரிவு

தபால் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற மாதாந்த கட்டணங்களைச் செலுத்தி இந்தப் பிரிவில் பதிவுசெய்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 93 ஆகும். இந்த நிறுவனங்களின் மூலம் தபால் செய்யப்படுகின்ற முத்திரை இயந்திரம் மூலம் கட்டணம் செலுத்தப்பட்ட பதிவு மற்றும் சாதாரண தபால் பொருட்கள் அவர்களின் முகவர்களுக்குக் கொண்டு சென்று கையளிப்பதும் அந்த நிறுவனங்களின் முகவரிகளுக்கு அனுப்பப்படுகின்ற மற்றும் தபால் பெட்டி முகவரிகளுக்கு அனுப்பப்படுகின்ற தபால் பொருட்களை உரிய நிறுவனங்களுக்குக் கொண்டு கையளிப்பதும் இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

### 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மொத்தத் தபால் பிரிவினால் கையேற்கப்பட்ட தபால் பொருட்களுக்கான வருமானம்

| | கடிதங்களின் கொள்ளளவு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | பதிவுக் கடிதங்கள் | பதிவுப் பொதிகள் | பதிவு வெளிநாட்டுக் கடிதங்கள் | சாதாரண கடிதங்கள் | சாதாரண பொதிகள் | வருமானம் ரூபா. |
| 2014 | 3,605,848 | 132,516 | 19,288 | 29,230,489 | 25,391 | 33,013,532 |
| 2015 | 3,933,697 | 115,985 | 15,225 | 30,324,254 | 28,005 | 34,417,166 |




**உள்நாட்டு கடுகதிப் பிரிவு(Speed Post / Logi Post)**

வேகமான தபால் சேவையை எதிர்பார்க்கின்ற உள்நாட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு இந்தப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. இதன் தலைமையகம் கொழும்பு மத்திய தபால் பரிமாற்ற நிலையத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், இங்கு கொண்டுவந்து கையளிக்கப்படுகின்ற கொழும்பு, கண்டி, குருணாகல், கேகாலை, காலி மற்றும் மாத்தறை முகவரிகளைக் கொண்ட கடுகதித் தபால் பொருட்களை அதே தினத்தில் ஏனைய விநியோக அலுவலகங்களின் முகவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடுகதித் தபால் பொருட்களை அடுத்த நாள் தினத்திலும் விநியோகிக்கத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்குச் சென்று கடுகதி தபால் பொருட்களைப் பொறுப்பேற்றல் மற்றும் LOGI POST வசதிகளை வழங்குவது இந்தப் பிரிவினூடாக ஆற்றப்படுகின்ற சேவைகளாகும். தற்போது அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் 22 இந்தப் பிரிவில் பதிவுசெய்துள்ளன. இந்தப் பிரிவின் மாதாந்த கடுகதித் தபால் பொருட்களின் கொள்ளளவு சுமார் 50,000 ஆகுமென்பதுடன் மாதாந்த வருமானம் 5 மில்லியன் ரூபாவையும் தாண்டுகிறது.

2015 ஆம் ஆண்டுக்கான வருமானம்

| சேவை | கொள்ளளவு ரூ.மில். |
|---|---:|
| Speed Post | 337595 |
| Logi Post | 80460 |
| Mail Management | 112688 |
| மொத்தம் | 530743 |

### தபால் முத்திரை பொறி பிரிவு

தபால் திணைக்களத்தின் தேவைகளுக்கமைய தபால் முத்திரை இயந்திரங்களை வழங்குதல், புதுப்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் நிர்வாக நடவடிக்கைகள், தனியார் துறையிடமிருந்து கிடைக்கின்ற கோரிக்கைகளுக்கமைய தபால் முத்திரை இயந்திரங்களை கொள்வனவு செய்து பயன்படுத்த தேவையான உரிமப்பத்திரங்களை வெளியிடுதல், தனியார் துறைக்கு உரித்தான முத்திரை இயந்திரங்களுக்கு பணத்தை புகுத்தல், முத்திரை இயந்திரங்களில் உள்ளடக்கப்படுகின்ற பணம் மாதாந்தம் மற்றும் வருடாந்த வருமான அறிக்கைகளை பேணிவருதல், அரச நிறுவனங்களுக்கு வரவு செலவுத்திட்ட பிரேரணைகளுக்கமைய வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் மற்றும் தபால் அலுவலகங்களை அறிவுறுத்துவது இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.
பயன்படுத்தப்படுகின்ற தபால் முத்திரை இயந்திரங்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| அரசாங்க திணைக்களங்கள் | 1,591 |
| தனியார் | 1,729 |
| தபால் திணைக்களத்துக்கு உரித்தானவை | 2,880 |

### உரிமையற்ற கடித அலுவலகம்

நாடு முழுவதிலும் அமைந்துள்ள முகவரிகளுக்கு பல்வேறு காரணங்களின் அடிப்படையில் விநியோகிக்க முடியாத மற்றும் அனுப்பும் ஆளை கண்டுபிடிக்க முடியாத உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தபால் பொருட்கள் நாடு முழுவதிலுமுள்ள தபால் அலுவலகங்களிலிருந்து இந்த பிரிவுக்கு அனுப்பப்படுவதுடன் இதன்போது மேற்படி தபால் பொருட்களைத் திறந்து தொடர்ந்தும் விநியோகிக்கக்கூடியதாக உள்ளவற்றை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளல், விநியோகிக்க முடியாத பெறுமதிமிக்க பொருட்கள் இருப்பின் அவற்றை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்து வருமானத்தை தபால் திணைக்களத்துக்கு உரித்தான கணக்குகளுக்கு செலவு வைத்தல். பெறுமதியற்ற கடிதங்கள் கடதாசிகள் இருப்பின் அந்த கடதாசிகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதற்காக விற்பனை செய்து அந்த வருமானத்தை தபால் திணைக்களக் கணக்குகளில் செலவு வைப்பது இந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளும் பிரதான பணியாகும்.

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கடிதங்களின் உரிமையாளர்களுக்கு விநியோகிக்க முடியாத மற்றும் அனுப்புபவை கண்டுபிடிக்க முடியாத உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தபால் பொருட்கள் இந்தப் பிரிவில் திறக்கப்பட்டு அந்தப் பொருட்களில் உள்ள பெறுமதிமிக்க பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு அந்த வருமானம் திணைக்களத்தின் கணக்கில் செலவு வைக்கப்படுகின்றது.

| வருடம் | விற்பனை செய்யப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) |
|---|---|---|
| 2014 | 104 | 367,705.00 |
| 2015 | 205 | 547,900.00 |




உரிமையாளர் அற்ற கடித அலுவலகத்தின் வருமானம் வருமானம் (ரூபா)

2015ஆம் ஆண்டு இந்தப் பிரிவில் இருந்து வெளியேற்றப்பட்ட கடதாசிகளை மீள்சுழற்சிக்காக விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா 186,692.00 ஆகும்.

**தபால் அலுவலகம்**

தபால் திணைக்களத்தின் தரப்படுத்தல்களுக்கு முதல்தர தபால் அலுவலகமான இதன் நிர்வாக நடவடிக்கைகள் பிரதி தபால்மா அதிபரினால் (மேற்கு) மேற்கொள்ளப்படுகின்றன. செயற்பாட்டின் நடவடிக்கைகள் மத்திய தபால் பரிமாற்று நிலையத்தின் ஊடாக இடம்பெறுகின்றன.

- **காசாளர் பிரிவு**

மத்திய தபால் பரிமாற்று நிலையத்தில் இடம்பெறுகின்ற வியாபார, தபால் முத்திரை, கடுகதி (உள்நாடு), உபதபால், தபால் பெட்டி,EMS, கொழும்பு விநியோகப் பிரிவுக்கு திருப்பிக் கிடைத்துள்ள கடித அலுவலம் மற்றும் பராமரிப்பு ஆகிய பிரிவுகளிடமிருந்து கிடைக்கின்ற சகல வருமானங்களையும் கணக்குகளில் பதிவு செய்தல் மற்றும் ஊழியர்களின் சம்பளங்கள், பதிலாட்களுக்கான சம்பளங்கள், மேலதிக நேரம், பிரயாணச் செலவின கொடுப்பனவு மற்றும் பிரயாணச் செலவினக் கொடுப்பனவு முற்பணங்களைச் செலுத்தல் போன்ற சகல கொடுப்பனவு நடவடிக்கைகளும் இதன்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

- **பொதிகள் பிரிவு**

பொதிகள் அலுவலகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளை மத்திய தபால் பரிமாற்று நிலையத்தின் ஊடாக மேற்கொள்வதுடன் வெளிநாட்டு பொதிகளை ஒத்துமாற்றுவது ஒப்புநோக்குவதானது சுங்கப் பரிசோதனையை அடுத்து உரிமையாளர்களுக்கு பொதிகளை கையளிப்பதற்காக கண்டி, காலி, கட்டுநாயக்க, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பிராந்திய வெளிநாட்டு பொதிகள் அலுவலகங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்ற பொதிகளை கையேற்றல் வெளிமாகாணங்களில் இருந்து கிடைக்கின்ற வெளிநாட்டு பொதிகளை கடல்மார்க்கமாகவும் விமானம் மூலமும் அனுப்புவது மத்திய

தபால் பரிமாற்று நிலையத்தில் உள்ள வெளிநாட்டு பொதிகளை அனுப்பும் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. வெளிநாட்டு பொதிகளை வெளிநாட்டு பயணம் முடிவுகளுக்கு வெளிநாட்டு தபால் பிரிவுக்கு அனுப்பப்படுகின்றது.

இந்நாட்டு பொதிகள் பிரிவானது பொதுமக்களினால் பிற மாகாணங்களுக்கு அனுப்புதல் மற்றும் கொழும்பில் விநியோகிப்பதற்காக கையளிக்கப்படுகின்ற சாதாரண மற்றும் பெறுமதி செலுத்தி பொறுப்பளிக்கப்படுகின்ற பொதிகளை பொறுப்பேற்றல், அனுப்புதல் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன. கொழும்பு நகரத்தில் பெறுமதி செலுத்தி பொறுப்பேற்றுக் கொள்ளப்படுகின்ற பொதிகளை விநியோகித்தல் மற்றும் கணக்குகளில் பதிவுசெய்வதும் இந்தப் பிரிவின் கருமபீடத்தில் மேற்கொள்ளப்படுவதுடன் கொழும்பு கோட்டை, மருதானை, கறுவாத்தோட்டம் மற்றும் கொம்பனித்தெரு ஆகிய நகர்ப்புறப் பிரதேசங்களில் பொதிகளை விநியோகிப்பது அதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஐந்து தபால்காரர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. கொழும்பு நகரத்தில் பொதிகளை விநியோகிப்பது பன்முகப்படுத்தப்பட்டுள்ள அலுவலகங்களுக்கு பொதிகளை அனுப்புவதும் ஏனைய கொழும்பு நகரப் பிரதேசங்களுக்கு சாதாரண கடிதங்களை அனுப்புவதும் தபால்காரர் பிரிவுக்கு அனுப்புவதும் இந்த பொதிகள் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

**உள்நாட்டு பொதிகள் கொள்ளளவு - 2015**

| | | **பெறுகைகளின் எண்ணிக்கை** | **விநியோகிக்கப்பட்ட எண்ணிக்கை** |
|---|---|---|---|
| கருமபீடத்தில் கையேற்கப்பட்ட பொதிகள் | சாதாரண பொதிகள் | 83923 | |
| | பெறுமதி செலுத்தி பொறுப்பேற்றவை | 3513 | |
| கொழும்பில் விநியோகித்தல் | சாதாரண பொதிகள் | | 19349 |
| | பெறுமதி செலுத்தி பொறுப்பேற்றவை | | 885 |
| பிற மாகாணங்களில் இருந்து கிடைத்தவை | சாதாரண பொதிகள் | 87467 | 150827 |
| | பெறுமதி செலுத்தி பொறுப்பேற்றவை | 43983 | 46543 |

**வெளிநாட்டு பொதிகளின் கொள்ளளவு**

| | | கரும பீடத்தில் பொறுப்பேற்கப்பட்ட பொதிகளின் எண்ணிக்கை | பிற மாகாணங்களில் இருந்து பொறுப்பேற்கப் பட்ட எண்ணிக்கை | வெளிநாட்டு பொதிகளை கையேற்றல் / விநியோகித்தல் | வெளிநாட்டு பொதிகளின் பெறுகை |
|---|---|---|---|---|---|
| வெளிநாட்டு பொதிகள் | விமானப் பொதிகள் | 117 | 1424 | 9408 | |
| | கடல் மார்க்கப் பொதிகள் | 1735 | 2540 | 18169 | |
| | சாதார விமான பொதிகள் | | | | 24,778 |
| | சாதாரண கடல் மார்க்க பொதிகள் | | | | 12,618 |
| | சுங்க வரி பக்கட் (சாதாரணம்) | | | | 5,032 |
| | வீதிசார் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்ட பொதிகள் | | | | 3124 |
| | ரேகு சுங்க வரி பக்கட் | | | 4726 | |

**சுங்க விடுதலைக்கட்டணம்:**

களஞ்சியக் கட்டணம் 4,216,530.00

திருப்பியனுப்பல் கட்டணம் 1,871,200.00

வெளிநாட்டு பொதிகளை கையேற்றல் 82,367.68

தபால் கட்டணம் } **6,170,097.60**

**வெளிநாட்டு பொதிகள் பிரிவு**

| **2015 கடிதங்கள், தபால்கள் புள்ளிவிபரம் - வெளிநாட்டு தபால் பிரிவு** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **இந்நாட்டுக்கு கிடைத்தவை** | | | | | | |
| | **கடிதங்கள்** | **தபால் அட்டை** | **அச்சுப் பொருட்கள்** | **கடுகதி கடிதங்கள்** | **சிறிய பக்கெட்டுக்கள்** | **மொத்தம்** |
| இந்நாட்டுக்கு கிடைத்தவை | 1,817,035 | 27,686 | 213,740 | 4,901 | 1,152,472 | 3,215,834 |
| இந்நாட்டிலிருந்து அனுப்பப்பட்டவை | 1,575,550 | 1,302,590 | 171,385 | 3,725 | 12,496 | 3,065,746 |

- **வெளிநாட்டு தபால் பிரிவு**

பொதுமக்களினால் வெளிநாட்டு பயண முடிவுகளுக்கு தபால் மூலம் அனுப்பப்படுகின்ற தபால் பொருட்களை அந்நாடுகளுக்கு அனுப்புவதும் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குள் விநியோகிப்பதற்காக கிடைக்கின்ற தபால் பொருட்களை பயம் முடிவுகளுக்கு அனுப்புவதும் வெளிநாட்டு தபால் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.
விமான, கடல் மார்க்கமான மற்றும் EMS என்ற வகையில் மூன்று விதமாக வெளிநாட்டு தபால் பொருட்கள் பரிமாற்றம் செய்து கொள்ளப்படுகின்றன.

**வெளிநாட்டு தபால் பிரிவு, வெளிநாட்டு கடித தபால் நடவடிக்கை பிரிவு மற்றும் EMS கிளைகளின் 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளுக்கான முன்னேற்றம்**

| வெளிநாட்டு கடித தபால் நடவடிக்கை பிரிவு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைக்கு கிடைத்தவை | | | | | | |
| **ஆண்டு** | **கடிதம்** | **தபால் அட்டை** | **அச்சுப் பொருட்கள்** | **கடுகதி கடிதங்கள்** | **சிறிய பக்கெட்டுகள்** | **மொத்தம்** |
| 2014 | 2,019,568 | 28,995 | 316,904 | 4,653 | 840,907 | 3,211,027 |
| 2015 | 1,817,035 | 27,686 | 213,740 | 4,901 | 1,152,472 | 3,215,834 |
| முன்னேற்ற விகித வித்தியாசம் | **-10%** | **- 4%** | **-38%** | **+5%** | **+31 %** | **+0.1%** |

**இலங்கைக்கு கிடைத்த தபால் பொருட்கள்**



கடிதம் தபால் அட்டை அச்சுப் பொருட்கள் கடுகதி கடிதங்கள் சிறிய பக்கெட்டுகள்

| வெளிநாட்டுக் கடித தபால் நடவடிக்கை பிரிவு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **இலங்கையிலிருந்து அனுப்பப்பட்டவை** | | | | | | |
| **ஆண்டு** | **கடிதம்** | **தபால் அட்டை** | **அச்சுப் பொருட்கள்** | **கடுகதி கடிதங்கள்** | **சிறிய பக்கெட்டுகள்** | **மொத்தம்** |
| 2014 | 2,176,325 | 849,713 | 275,575 | 4,317 | 8,988 | 3,314,918 |
| 2015 | 1,575,550 | 1,302,590 | 171,385 | 3,725 | 12,496 | 3,065,746 |
| முன்னேற்ற விகித வித்தியாசம | **-32%** | **+42%** | **-46%** | **-14%** | **+32%** | **-7%** |

இலங்கையில் இருந்து அனுப்பப்பட்ட தபால் பொருட்களின் எண்ணிக்கை




கடிதம் தபால் அட்டை அச்சுப் பொருட்கள் கடுகதி கடிதங்கள் சிறிய பக்கெட்டுகள்
மேற்படி புள்ளி விபரங்களுக்கு அமைய இந்நாட்டுக்கு கிடைத்த மற்றும் இந்நாட்டில் இருந்து அனுப்பப்பட்ட வெளிநாட்டு கடிதங்களில் ஒரு பாதகமான வளர்ச்சியே வெளிப்படுத்தப்படுகின்றது.
எனினும் கிடைத்த சிறிய பக்கெட்டுகளின் எண்ணிக்கை +31% இனால் அனுப்பப்பட்ட சிறிய பக்கெட்டுக்களின் எண்ணிக்கை +32% இனால் அதிகரித்துள்ளமை வெளிநாட்டு தபாலின் பாதுகாப்பு பற்றிய மக்களின் நம்பிக்கை மற்றும் தாங்கிக் கொள்ளக்கூடிய விலைக்கு தரமான சேவையை தபால் மூலம் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ளதை வெளிப்படுத்துகின்றது.
அனுப்பும் தபால் அட்டைகளின் +42%இனால் வளர்ச்சியடைந்துள்ளமை வெளிநாட்டு சுற்றுப் பயணிகளின் வருகை அதிகரித்தமை காரணமாகவாகும் என்பது தெரிகின்றது.
கிடைக்கின்ற மற்றும் அனுப்பப்பட்ட கடிதங்கள், முத்திரை பொருட்கள் மற்றும் கடுகதி பொருட்களின் பாதகமான வளர்ச்சிக்கு காரணம் இணையத்தளம் ஊடாக படங்களைக் கொண்ட அழைப்புகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மென்பொருட்கள் உள்ள கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் டீழழம ருயனநச போன்ற உபகரணங்களை பயன்படுத்துவது அதிகரித்துள்ளமை செய்திகளை அறிந்துகொள்வதற்கு வசதியான EMS மற்றும் பதிவுத்தபாலில் ஈடுபடுவது, இலத்திரனியல் பணப்பரிமாற்ற முறைகளைப் பயன்படுத்தல் போன்ற முறைமைகள் காரணமாகியுள்ளமை தெரியவருகின்றது.

| EMSபிரிவு | | | |
|---|---|---|---|
| வருடம் | இந்நாட்டுக்கு கிடைத்த பொருட்களின் எண்ணிக்கை | இந்நாட்டில் இருந்து அனுப்பப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) |
| 2014 | 101,342 | 36,780 | 182,820,400.00 |
| 2015 | 115,802 | 40,581 | 207,774,200.00 |
| முன்னேற்றம் விகிதமாக | +12% | +10% | +13% |

## EMS பொருட்களின் எண்ணிக்கை




இந்நாட்டுக்கு கிடைத்த பொருட்களின் எண்ணிக்கை
இந்நாட்டில் இருந்து அனுப்பப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை
இலங்கைக்கு கிடைக்கின்ற EMS பொருட்களின் எண்ணிக்கை 12%ஆல் வளர்ச்சியடைவதற்கு தென்கொரியாவில் உள்ள புலம்பெயர் ஊழியர்களின் பங்களிப்பு தாக்கம் செலுத்தியுள்ளமை அவதானிக்கப்படுகின்றது.
கிடைக்கின்ற சிறிய பக்கெட்டுக்கள் +31மூனால் வளர்ச்சியடைவதன் மூலம் உறுதியாவது E-commerce தொடர்பில் மக்களின் ஈடுபாடு அதிகரித்துள்ளமை மற்றும் மொத்த தபால் பொதிகள் பிரிவின் -20.56% மான பாதகமான வளர்ச்சி ஏற்படுவதற்கும் இது காரணமாக அமைந்துள்ளது.
மேலே குறிப்பிடப்பட்டுள்ள வளர்ச்சி விகிதங்களுக்கமைய ஒட்டுமொத்த வெளிநாட்டுத் தபாலின் சாதாரண முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்திருப்பது e-commarce இலத்திரனியல் வர்த்தக கொள்வனவாளர்கள், புலம்பெயர் ஊழியர்கள், அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுப்பயணிகள் என்பது உறுதியாகின்றது. இதற்கமைய வாடிக்கையாளர் குழுக்களை இலக்காகக் கொண்டு தபாலின் நிலையான அபிவிருத்திக்காக சந்தைப்படுத்தல் கருத்திட்டம் ஒன்றை அமுல்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக இருக்கும்.

**வெளிநாட்டு தபால் பிரிவு**

| **கடல் மார்க்கமாக தபால்களை அனுப்புதல்** | |
|---|---|
| ஆண்டு | நிறை கிலோ கிறாம் |
| 2014 | 1,569.100 |
| 2015 | 1,559.300 |

| **கடல் மார்க்கமாக தபால்களை பெறுகை** | |
|---|---|
| ஆண்டு | நிறை கிலோ கிறாம் |
| 2014 | 4,797.350 |
| 2015 | 4,257.540 |

| **விமானம் மூலம் தபால் அனுப்புதல்** | |
|---|---|
| ஆண்டு | நிறை கிலோ கிறாம் |
| 2014 | 158,674.7 |
| 2015 | 165,589.8 |

| **விமானம் மூலம் தபால் அனுப்புதல்** | |
|---|---|
| ஆண்டு | நிறை கிலோ கிறாம் |
| 2014 | 335,595.500 |
| 2015 | 435,386.700 |

- **பதிவுசெய்யும் பிரிவு**

பதிவுசெய்து தபாலுக்கு கையளிக்கப்படுகின்ற தபால் பொருட்கள் பற்றிய விபரம் இந்தப் பிரிவில் உள்ளடக்கப்படுகின்றது.

2015ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட தபால் பொருட்கள் பற்றிய விபரங்கள்

| | கருமபீடத்துக்கு | வெளி மாகாணங்களில் இருந்து | வெளிநாடு |
|---|---|---|---|
| பெறுகை | 7,589,067 | 13,216,347 | 414,260 |
| அனுப்புகை | 16,208,411 | 5,053,076 | 284,004 |

**மத்திய தபால் பரிமாற்று நிலையத்தின் வருமானம், செலவினம் பற்றிய விபரம்**

| | 2014 | 2015 |
|---|---|---|
| வருமானம் | 1,984,187,246.05 | 2,012,103,971.28 |
| செலவினம் | 1,027,822,859.41 | 1,259,553,162.04 |

**வருமான செலவின முன்னேற்றம் - மத்திய தபால் பரிமாற்று நிலையம்**




## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவு

தபால் திணைக்களத்தின் சகல பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் அவற்றின் இலக்குகளை வினைத்திறனுடனும் உற்பத்தி திறனுடனும் அடையக்கூடிய வகையில் தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது இந்தப் பிரிவின் பொறுப்பாகும் என்பதுடன் இது தபால்மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கிவருகின்றது. இதன்கீழ் நடவடிக்கை பிரிவில் இயங்கிவருகின்ற தபால்சேவைகள் மற்றும் முகவர் சேவைகள் தன்னியக்கமயப்படுத்தப்பட்டு இலத்திரனியல் சேவைகளுடாக அமுல்படுத்துவதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கமைய தபால் வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் விருத்தி செய்யப்பட்ட தபால் வலையமைப்பை பயன்படுத்தி மேற்படி சேவைகளை மேம்படுத்தல் மற்றும் புதிய சேவைகளை இணைத்துக்கொள்வதற்கு இந்த ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- திணைக்களத்துக்குத் தேவையான மென்பொருட்களை விருத்தி செய்தல், தரவுகளை களஞ்சியப்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் மென்பொருட்களை இற்றைப்படுத்தி பேணிவருதல்.

- திணைக்களத்திற்குத் தேவையான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் பற்றி ஆராய்தல், ஆய்வுகளை மேற்கொள்ளல், கருத்திட்டங்களை தயார்செய்தல் போன்றன மேம்படுத்தல் செயற்பாட்டு பிரிவினூடாக மேற்கொள்ளப்படுவதுடன் இந்த தகவல்களை மென்பொருள் அபிவிருத்திப் பிரிவுக்கு பெற்றுக்கொடுத்தல், தயார்செய்யப்பட்ட மென்பொருட்களை விருத்திசெய்தல், தபால் வலையமைப்பில் அவற்றை அமுல்படுத்தும்போது தேவையான உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

- தபால் வலையமைப்பை தொடர்ச்சியாக பேணிவரத் தேவையான வன்பொருட்களை வழங்குதல், இனங்காணல், பராமரிப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக செயற்படல், பிரதான சேவர் மற்றும் அனர்த்த மீளமைப்பு பிரிவு சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், இணையத்தள வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

- தலையக தகவல்கள் தொழில்நுட்பப் பிரிவின் நடவடிக்கைகளை பிராந்திய அடிப்படையில் விஸ்தரிப்பதற்காக ஒவ்வொரு பிராந்திய தபால் அத்தியட்சகர் பிரிவுக்கும் பிராந்திய தகவல் தொழில்நுட்ப வள நிலையங்களை தாபித்து அவற்றிற்கு தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் உதவி வலையமைப்பு கட்டுப்பாட்டு அலுவலர்களைக் கொண்ட குழுவொன்றின் மூலம் இந்த சேவைகளை தொடர்ச்சியாக பேணிவரத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தலைமையக தகவல் தொழில்நுட்ப பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

## தொழில்நுட்ப பிரிவினால் உருவாக்கப்பட்டுள்ள மென்பொருட்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள்

- பட்டியல்களைக் கையேற்றல் - வாடிக்கையாளர் மின் பட்டியல், மொபிடெல் முன்செலுத்தல் / பின்செலுத்தல் பட்டியல்கள், இலங்கை ரெலிகொம் கட்டணப் பட்டியல்கள்
- ஆட்களுக்கிடையிலான இலத்திரனியல் காசுப்பரிமாற்றம், சேவைசார் காசுப்பரிமாற்றம். ஊழியர் சேமலாப நிதியத்தின் காசுப்பரிமாற்றம், ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் காசுப்பரிமாற்றம்
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பரீட்சைக் கட்டணங்களை கையேற்றல்
- கடுகதி தபால் நடவடிக்கைகள்
- இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சைக் கட்டணங்கள், பரீட்சைகளுக்கான மீள்பரிசீலனைக் கட்டணங்களை கையேற்றல், சான்றிதழ்களின் பிரதிகளுக்கான கட்டணங்களை கையேற்றல்
- சிலிங்கோ காப்புறுதிக் கம்பனியின் காப்புறுதி தவணைப் பணங்களைக் கையேற்றல்
- தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு நாணயங்களை தபால் அலுவலகம் மூலம் செலுத்துவதற்கான முறையியல்
- e-telemail சேவை
- IPS.Post சேவை,Foreign Article Tracking
- ஓய்வூதியம் செலுத்தல்
- M-epay சேவை

## சர்வதேச விருதுகள் - 2015

2015ஆம் ஆண்டில் m-billionth ஆசிய விருது வழங்கும் நிகழ்வில் M-epay மென்பொருளுக்கு விசேட விருது கிடைத்துள்ளது.

## 2015ஆம் ஆண்டில் விருத்தி செய்யப்பட்ட புதிய மென்பொருட்கள் மற்றும் இலத்திரனியல் சேவைகள்

- **தபால் காப்புறுதி மேடையின் கீழ் (Postal Insurance Flat from)**
  மூன்றாம் தரப்புக் காப்புறுதி
  சிறுவர் காப்புறுதி மற்றும் நிவாரணக் காப்புறுதி
  பூரண மோட்டார் வாகனக் காப்புறுதி

- **E-Telemail சேவை**
  ரெலிமெயிலை கையேற்பதும் விநியோகிப்பதும்

- **IPS Post**
  வெளிநாட்டு தபால் பொருட்கள் கிடைத்தல் மற்றும் விநியோகித்தல் பற்றிய விபரங்களை உள்ளடக்குதல் (Foreign Article Tracking)

- தேசிய சேமிப்பு வங்கி (NSB Banking flat form)
  காசு வைப்பு, கொடுப்பனவு, நிலையான வைப்பு மென்பொருட்களை மீள தயார்செய்து அமுல்படுத்தல்.

## 2015ஆம் ஆண்டில் இலத்திரனியல் சேவைகளின் எண்ணிக்கை

| | இலத்திரனியல் சேவை | கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மின்சார பட்டியல் | 12,310,397 |
| 2. | சிலிங்கோ மூன்றாம் தரப்பு காப்புறுதி | 12,593 |
| 3. | மொபிடெல் பட்டியல் | 388,398 |
| 4. | Money Transfer Issues | 984,033 |
| 5. | Money Transfer Payments | 976,977 |
| 6. | SLIDA பரீட்சைக் கட்டணங்கள் | 542 |
| 7. | ரெலிகொம் பட்டியல் | 404,363 |
| 8. | பரீட்சைத் திணைக்கள பரீட்சைகள் | 306,110 |
| 9. | பரீட்சைத் திணைக்கள மீள் பரிசீலனை | 154,478 |
| 10. | ஈ-ரெலிமெயில் | 12,156 |

## வழங்கல் பிரிவு

2008.01.01ஆந் திகதி தாபிக்கப்பட்ட வழங்கல் பிரிவு, தபால் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்கின்ற சகல சேவைகள் மற்றும் கொள்வனவு செய்யப்படுகின்ற சகல பொருட்களையும் முறையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் அரசாங்க வழங்கல் வழிகாட்டல் தொகுப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைத் தொகுப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய பெற்றுக்கொள்வதற்கும் கொள்வனவு செய்வதற்கும் செயற்படுவது வழங்கல் பிரிவின் செயற்பணியாகும். பிரதம கணக்காளரின் கண்காணிப்பின் கீழ் இந்தப் பிரிவு இயங்கி வருகின்றது.

### 2015ஆம் ஆண்டு வழங்கல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள்
### 308 - 01- 01- 2001

தபால் தலைமையகம் மற்றும் அதற்கு மேலதிகமாக நிர்மாணிக்கப்பட்ட, புதுப்பிக்கப்பட்ட கட்டிடங்கள் பற்றிய விபரம்.

| தொ. இல. | வழங்கல் இலக்கம் | விடயம் | மொத்த தொகை (சகல வரிகளும் உள்ளடங்கலாக) ரூபா |
|---|---|---|---|
| 01. | POST/PMD/04/60(01)/2015 | தபால் தலைமையக கட்டிடத்தின் கீழ் மாடியில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட அழைப்பு நிலையத்தை ஒழுங்குபடுத்தல் | 493,948.45 |
| 02. | POST/PMD/04/60(04)/2015 | நாரஹேன்பிட்டி அத்தியட்சகர் (வழங்கல்) அலுவலக கட்டிடத்தை புதுப்பித்தல் | 2,665,110.00 |
| 03. | POST/PMD/04/60(04)/2015VII | தபால் மற்றும் தொலைத்தொடர்பு அலுவலர்களின்சங்க அலுவலகத்தை புதுப்பித்தல் | 318,436.80 |

**308 - 01- 01- 2103**
**இயந்திர சாதனங்களை கொள்வனவு செய்வதற்காக பிரதானமாக மேற்கொண்ட செலவினங்கள்**

| தொ. இல. | வழங்கல் இலக்கம் | விடயம் | மொத்த தொகை (சகல வரிகளும் உள்ளடங்கலாக) ரூபா |
|---|---|---|---|
| 04. | POST/PMD/05/44(08)/2015 | A3 வகையிலான பிரதி எடுக்கும் இயந்திரங்கள் 2ஐ பெற்றுக்கொள்ளல் | 477,300.00 |
| 05. | POST/PMD/05/44(25)/2015 | இலத்திரனியல் கடித தராசுகள் 250ஐ பெற்றுக்கொள்ளல் | 3,500,107.50 |

**308 - 01- 01- 1201**
**எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக செலவிடப்பட்ட செலவினம்.**

| தொ. இல. | வழங்கல் இலக்கம் | விடயம் | மொத்த தொகை (சகல வரிகளும் உள்ளடங்கலாக) ரூபா |
|---|---|---|---|
| 06. | POST/PMD/01/33(02)/ 2015 | 2016ஆம் ஆண்டுக்கான விடயங்களைப் பெற்றுக்கொள்ளல் | 4,787,632.57 |
| 07. | POST/PMD/01/32(1-2) 2015 | தபால் தலைமையகத்திற்கான டோனர் மற்றும் கார்ட்ரிஜ் கொள்வனவு | 498,612.00 |
| 08. | POST/PMD/02/36/2014 | பாதுகாப்பு பிளாஸ்டிக் முத்திரைகள் 1.5 மில்லியினைப் பெற்றுக்கொள்ளல் | 13,819,500.00 |
| 09. | POST/PMD/02/38/2014 | பொதி செய்யும் பொருட்களை பெற்றுக்கொள்ளல் | 16,407,500.00 |
| 10. | POST/PMD/01/34(01)/2015 | 30,000 பொலிசக் பொதிகளை பெற்றுக்கொள்ளல் | 1,611,054.00 |
| 11. | POST/PMD/02/36/2015 | 3 மில்லியன் பாதுகாப்பான பிளாஸ்டிக் முத்திரைகளை பெற்றுக்கொள்ளல் | 20,046,600.00 |
| 12. | POST/PMD/01/33(04)/2015 | 1000 நாளாந்த பெட்டிகளை பெற்றுக்கொள்ளல் | 4,970,000.00 |
| 13. | POST/PMD/01/37(01)2015 | வெளிநாட்டு பதிவு (RS வகையிலான பார்கோர்ட் லேபல்கள்) ஒரு மில்லியனைப் பெற்றுக்கொள்ளல் (பார்க்கோர்ட் லேபல் 3 மில்லியன்) | 1,970,028.00 |

**ஏனைய மீண்டுவரும் செலவின விடயங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள்**
**308 - 01- 01- 1405**

| தொ. இல. | வழங்கல் இலக்கம் | விடயம் | மொத்த தொகை (சகல வரிகளும் உள்ளடங்கலாக) ரூபா |
|---|---|---|---|
| 14 | POST/PMD/01- 36(01)/2015 | பதில் உபதபால் நிலைய பொறுப்பதிகாரிகளின் நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கிவைக்கும் வைபவத்திற்கு பொருத்தமான இடமொன்றைப் பெற்றுக்கொள்ளல் | 147,690.54 |
| 15 | POST/PMD/01- 36(02)/2015 | பதில் உபதபால் நிலையப் பொறுப்பதிகாரிகளின் நிரந்தர நியமன கடிதங்களை வழங்கி வைக்கும் வைபவத்திற்கான உபசரிப்பு நடவடிக்கைகளை பெற்றுக்கொள்ளல் | 230,500.00 |
| 16 | POST/PMD/03/Mis/ 2015 | வீதிப் பணம் மற்றும் மேற்படி பணத்தைக் கொண்டு செல்கின்ற அலுவலர்களுக்கு காப்புறுதிகளைப் பெற்றுக்கொள்ளல் | 730,282.59 |

**308 - 01- 01- 1301 / 2003**

தபால் திணைக்களத்தின் வாகனங்களை அடிக்கடி புதுப்பிப்பதை தடுத்து நீண்டகாலம் பயன்பாட்டுக்க ஈடுபடுத்துவதற்காக அசல் உதிரிப்பாகங்களை உரிய முகவர் நிறுவனங்களிடமிருந்து பெற்று இயந்திரப் பொறியியல் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

| தொ. இல. | வழங்கல் இலக்கம் | விடயம் | மொத்த தொகை (சகல வரிகளும் உள்ளடங்கலாக ரூபா |
|---|---|---|---|
| 17. | POST/PMD/03/51-16/2014 | திணைக்களத்திற்கு உரித்தான வாகனங்களுக்கு டயர் கொள்வனவு செய்தல் | 1,294,921.55 |
| 18. | POST/PMD/MA/Vehi/01-iii)/2015 | தபால் திணைக்களத்திற்கு கிடைத்த புதிய 8 கெப் வண்டிகளை காப்புறுதி செய்தல் | 311,961.36 |
| 19. | POST/PMD/03/51-03/2015 | தபால் திணைக்களங்களுக்கு உரித்தான வாகனங்களை புதுப்பிப்பதற்கு மிட்சுபிசி உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் | 7,210,553.70 |
| 20. | POST/PMD/03/51-04/2015 | தபால் திணைக்களத்துக்கு உரித்தான வாகங்களை புதுப்பிப்பதற்கு நிசான் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல். | 6,207,847.94 |
| 21. | POST/PMD/03/51-05/2015 | தபால் திணைக்களத்துக்கு உரித்தான வாகங்களை புதுப்பிப்பதற்கு இசுசு உதிரிப்பாகங்களை கொள்வனவு | 64,890.15 |

| | | | |
|---|---|---|---|
| | | செய்தல். | |
| 22. | POST/PMD/03/51-06/2015 | தபால் திணைக்களத்துக்கு உரித்தான வாகங்களை புதுப்பிப்பதற்காக டாடா உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் | 24,908.40 |
| 23. | POST/PMD/03/57-02/2015 | 2016ஆம் ஆண்டுக்கு தபால் திணைக்களத்துக்கு உரித்தான வாகனங்களுக்கு புகை சான்றிதழை பெற்றுக்கொள்ளல் | 242,090.00 |
| 24. | POST/PMD/03/57-01/2015 | 2016ஆம் ஆண்டுக்கு தபால் திணைக்களத்துக்கு உரித்தான வாகனங்களை காப்புறுதி செய்தல் | 5,923,716.08 |

**308 - 01- 01- 2102**

**இயந்திர சாதனங்களை கொள்வனவு செய்வதற்காக பிரதானமாக மேற்கொள்ளப்பட்ட செலவினம்**

| தொ. இல. | வழங்கல் இலக்கம் | விடயம் | மொத்த தொகை (சகல வரிகளும் உள்ளடங்கலாக ரூபா |
|---|---|---|---|
| 25 | POST/PMD/05/45(07)/ 2015 | அலுவலக தளபாடம், உபகரணங்கள் பெற்றுக்கொள்ளல் | 321,007.55 |
| 26 | POST/PMD/05/44(23)/ 2015 | டெஸ்க்டொப் கணினி, டொட் மெட்ரிக்ஸ் அச்சு இயந்திரம், லேசர் அச்சு இயந்திரம்,UPS இயந்திரங்களை கொள்வனவு செய்தல் | 14,915,250.00 |
| 27 | POST/PMD/05/44(11)/ 2015 | லெப்டொப் கணினி இயந்திரங்கள் 5ஐ கொள்வனவு செய்தல் | 545,000.00 |
| 28 | POST/PMD/05/44(29)/ 2015 | லெப்டொப் கணினி இயந்திரங்கள் 28ஐ கொள்வனவு செய்தல் | 2,923,760.00 |

**308 - 02- 01 - 2502**

**முத்திரை பணியகத்தின் முத்திரை மேம்படுத்தல் நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

| தொ. இல. | வழங்கல் இலக்கம் | விடயம் | மொத்த தொகை (சகல வரிகளும் உள்ளடங்கலாக) ரூபா |
|---|---|---|---|
| 29 | POST/PMD/03/50-04/2015 | முத்திரை பெயர்ப்பட்டியலின் முதல் தொகுதியின் 3000 புத்தகங்களை அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளல் | 1,350,000.00 |
| 30 | POST/PMD/03/50-14/2015 | நினைவுப் புத்தகங்கள் 500 ஐ அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளல் | 2,697,300.00 |

## சொத்து முகாமைத்துவப் பிரிவு

2009ஆம் ஆண்டில் சொத்து முகாமைத்துவப் பிரிவு தாபிக்கப்பட்டது. நாடு முழுவதிலும் உள்ள திணைக்களத்துக்கு உரித்தான நிலையான சொத்துக்களை இற்றைப்படுத்தி முறையாகப் பேணிவருவது இதன் பிரதான நோக்கமாகும். திணைக்களத்துக்கு உரித்தான பொருட்கள், காணிகள், கட்டிடங்கள், வாகனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் பொறி, கணினி என்பவற்றை முறையாகப் பேணிவருதல், அகற்றுதல் மற்றும் பதிவேடுகளில் பதிவுசெய்தல் ஆகியன இதன் பிரதான பணிகளாகும்.

- 2014ஆம் ஆண்டு சம்பந்தமாக வருடாந்த பொருட்கணிப்பீட்டு நடவடிக்கைகள் 2015 ஜூன் மாதம் பூர்த்தி செய்யப்பட்டு சகல பிராந்திய தபால் பிரிவுகளுக்கும் உரித்தான அனைத்து அலுவலகங்கள் மற்றும் தலைமையக கட்டுப்பாட்டு அலுவலகங்களின் அறிக்கைகள் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

- நாடுமுழுவதிலும் உள்ள திணைக்களத்துக்கு உரித்தான காணிகள் மற்றும் கட்டிடங்களை விலைமதிப்புச் செய்தல். நாடு முழவதிலுமுள்ள திணைக்களத்திற்கு உரித்தான காணிகள் மற்றம் கட்டிடங்கள் சம்பந்தமான தரவுகளை சேகரித்து அவற்றை விலைமதிப்புத் திணைக்களத்திடம் சமர்ப்பித்து முறையான விலைமதிப்பு அறிக்கைகள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2015ஆம் ஆண்டில் 170 தபால் அலுவலகங்களின் விலைமதிப்பு அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

- திணைக்களத்தின் உபயோகத்தில் இருந்து நீக்கப்பட்ட 27 வாகனங்களை கேள்விகோரி விற்பனை செய்யும் நடவடிக்கைகள் ஆயத்தம் செய்யப்பட்டிருப்பதுடன் வாகனங்களை விலைமதிப்பு செய்து ஆரம்பகட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- 2015ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதிலும் உள்ள திணைக்களத்துக்கு உரித்தான இயந்திர அறைகள், இயந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் சம்பந்தமான தரவுகளை சேகரிக்க நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

- 2015ஆம் ஆண்டு முதல் நாடுமுழுவதிலும் உள்ள திணைக்களத்துக்கு உரித்தான கணினிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் பற்றிய விபரங்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளமை.

## முத்திரைப் பணியகம்

1967.01.01ஆந் திகதி பாராளுமன்றத்தில் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டதை அடுத்து தபால் திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட முத்திரைப் பணியகம் தபால் அலுவலகங்களுக்குத் தேவையான தபால் முத்திரைகள் மற்றும் அரசாங்க வருமான முத்திரைகளை அச்சிடுவதும் களியாட்டம் ஒன்றாக முத்திரைகளை சேகரிப்பவர்களுக்கு முத்திரைகளை விற்பனை செய்வதும் மேற்கொள்கின்றது.

தற்போதைய நிறைவேற்று பணிப்பாளரின் கீழ் முத்திரைப் பணியகம் நிறுவகிக்கப்படுகின்றது. இதன் பிரதான பொறுப்பாக இருப்பது இந்நாட்டின் பொதுமக்களது கடிதங்களுக்கு கட்டணங்களை அறவிட்டுக்கொள்ளத் தேவையான முத்திரைகளை அச்சிட்டு வழங்குவதாகும். அவ்வாறே உலகம் முழுவதும் வியாபித்துள்ள முத்திரைகளை சேகரிக்கும் நடவடிக்கைக்கு வளங்களை பெற்றுக்கொடுப்பதும் இலங்கையில் உள்ள வெளிநாட்டு முத்திரைப் பிரியர்களை திருப்தியுறச் செய்வதற்காக வர்ணமிக்க சிறந்த தலைப்புகளைக் கொண்ட முத்திரைகளை வெளியிடுவதும் முத்திரைகள் சம்பந்தமான உற்பத்திகளாக வெளியிடப்படுகின்ற பல்வேறு உற்பத்திகளை வடிவமைத்து சந்தைக்கு விநியோகிப்பதும் இதன் பொறுப்புக்களாக உள்ளன.

2015ஆம் ஆண்டில் முத்திரைப் பணியகத்தின் வருமானம் 25.9 மில்லியன் ரூபாவாக சாதனை படைத்து வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கு நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ள காரணியாக இருப்பது திணைக்கள மட்டத்தில் இது நவீனமயப்படுத்தப்பட்டுள்ளமையாகும். 2002ஆம் ஆண்டின் பின்னர்

இலங்கையின் முத்திரை அச்சிடுவது இலங்கை அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படுகின்ற தொனிப்பொருள் அடிப்படையிலான 35 முத்திரைகளில் இலங்கையில் பல்வேறு கோணங்களையும் வெளிப்படுத்தக்கூடிய வகையில் புதிய முத்திரைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

நாடு முழுவதிலும் காணப்படுகின்ற 653 தபால் அலுவலகங்கள் மற்றும் 3410 உபதபால் அலுவலகங்களுக்கு முத்திரைகளை அச்சிட்டு விநியோகிப்பதானது முத்திரைப் பணியகம் மற்றும் அதனுடன் இணைந்த முத்திரைக் காப்பகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

முத்திரையை ஒரு விநோத களியாட்டமாக சேகரிக்கின்ற முத்திரைப் பிரியர்களுக்கு முத்திரை சம்பந்தமான உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கும் முத்திரைப் பணியகத்தில் விற்பனைக் கருமபீடம் ஒன்றை பேணிவருவதுடன் ஏனைய 100 தபால் அலுவலகங்களில் முத்திரை பிரியர்களுக்கான விற்பனைக்கூடங்கள் மூலம் முத்திரைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

**கணினிப் பிரிவு**

முத்திரைப் பணியகத்தில் முத்திரைகளை விற்பனை செய்யும் கருமபீடத்தில் இருந்தவாறு வாடிக்கையாளர் சேவைப்பிரிவு, தலைமை அலுவலகம், நிலையான கட்டளைக் கணக்குகள், முத்திரை இருப்புக் களஞ்சியம், முத்திரைக் காப்பகம் ஆகிய பிரிவுகள் அனைத்தும் கணினிமயப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன. பணிப்பாளருக்கும் கணக்காளருக்கும் முத்திரை காப்பகத்துக்கும் வாடிக்கையாளர்கள் அவர்களின் இருப்புக்கள் பற்றிய அறிக்கைகளை கணினி வலையமைப்பின் ஊடாக அதே நேரத்திலேயே பார்த்துக்கொள்ளக்கூடியவாறு இவை வலையமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

**நூதனசாலைப் பிரிவு**

தபால் திணைக்களத்தின் பாரம்பரிய வரலாறு சம்பந்தமாக பொதுமக்களை அறிவுறுத்தும் பொருட்டு நூதனசாலைப் பிரிவு பேணிவரப்படுகின்றது.

முத்திரைப் பணியகத்தினால் வெளியிடப்படுகின்ற சகல உற்பத்திகளும் இந்த நூதனசாலையில் வைப்புச்செய்யப்பட்டுள்ளன. அவ்வாறே பழைய முத்திரைகள், முத்திரைகள் சம்பந்தமான சரிபிழை பார்க்கப்பட்ட பிரதிகள் அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

நூதனசாலையை கண்டுகளிப்பதற்காக பாடசாலை மாணவர்களிடமிருந்து ரூபா 5 உம் பெரியவர்களிடமிருந்தும் ரூபா 20 உம் வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து ரூபா 100 உம் வெளிநாட்டு பெரியவர்களிடமிருந்து ரூபா 200 உம் கட்டணமாக அறவிடப்படுகின்றன. மேற்படி கட்டணங்களை நாளாந்தம் கணக்குகளில் பதிவுசெய்யும் நடவடிக்கைகளும் பதிவேடுகளை பேணிவரும் நடவடிக்கைகளும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நிலையான கட்டளைகள் பிரிவு**

முத்திரைப் பணியகத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையான கட்டளைகள் 3929ற்கு வருடாந்தம் முத்திரைகளை வெளியிடல் அவ்வவ் நிலையான கணக்குகளில் உள்ள கணக்கு உரிமையாளர்களுக்கு முத்திரை மற்றும் ஏனைய பொருட்களை உரிய நெரத்திற்கு தபால் மூலம் அனுப்புவது முத்திரைப் பணியகத்தின் பதவியணியினரால் மேற்கொள்ளப்படுகின்றது. வெளிநாட்டு நிலையியற் கட்டளை உரிமையாளர்களுக்கும் நிலையியற் கட்டளைகள் தயார்செய்யப்படுகின்றன.

**முதல்நாள் உரை களஞ்சியம்**

இந்தப் பிரிவில் சகல முதல்நாள் உரைகளும் முறையாக களஞ்சியப்படுத்தப்படுகின்றன. முதல்நாள் உரையை வெளியிடும்போது அவ்வாறு வெளியிடுவது சம்பந்தமான உரைகளில் முத்திரைகள் ஒட்டப்பட்டு அன்றைய நாளின் முத்திரையைப் பதிக்கும் நடவடிக்கைகள், அடிக்கடி வெளியிடப்படுகின்ற மேலே குறிப்பிடப்பட்ட முத்திரைகள் சம்பந்தமான பொருட்களை முறையாக விற்பனை கருமபீடங்களுக்கு விநியோகிப்பதற்கு அவற்றை உரைகளில் இட்டு அவற்றை பொதிசெய்யும் நடவடிக்கைகளும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 2015ஆம் ஆண்டில் முத்திரைப் பணியகத்தின் பெறுகைகள்

| மாதம் | பெறுகை (ரூபா சதம்) |
|---|---|
| ஜனவரி | 1,931,266.93 |
| பெப்ரவரி | 1,920,591.87 |
| மார்ச் | 1,574,654.97 |
| ஏப்ரல் | 1,951,683.01 |
| மே | 1,417,135.50 |
| ஜூன் | 1,924,452.04 |
| ஜூலை | 2,553,871.94 |
| ஆகஸ்ட் | 1,786,244.42 |
| செப்டெம்பர் | 2,161,709.41 |
| ஒக்டோபர் | 3,523,929.80 |
| நவம்பர் | 3,275,885.17 |
| டிசெம்பர் | 1,946,128.83 |
| **மொத்தம்** | **25,967,553.89** |

## 2015ஆம் ஆண்டில் முத்திரை விளம்பரம் மற்றும் முத்திரை விற்பனை பற்றிய விபரம்

கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சி (வருமானம்) : ரூபா 2,184,335/-
ஒவ்வொரு இரண்டு மாதத்திற்கும் ஒரு தடவை துறைமுகத்திற்கு வருகின்ற பயணிகள் கப்பல்களுக்கு முத்திரைகளை சேகரிக்கத் தேவையான விடங்கள் மற்றும் தபால் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

ரோயல் கல்லூரி முத்திரைக் கண்காட்சி (வருமானம்) : ரூபா 52,025/-

## முத்திரை நிகழ்ச்சித்திட்டம் - 2015

| முத்திரை அறிவித்தல் இல | தொனிப்பொருள் | முத்திரையின் பெறுமதி ரூபா | நினைவு ஆவணாத்தின் பெறுமதி ரூபா | முதல் நாள் உரையின் பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|
| 859 | பரிசுத்தப் பாபரசர் அவர்களின் இலங்கை விஜயம் | 10.00<br>75.00 | 85.00 | 105.00 |
| 860 | இலங்கை தேசிய வைத்தியசாலையின் 150 வது ஆண்டுவிழா | 10.00 | | 30.00 |
| 861 | வெசாக் - 2015 | 8.00<br>10.00<br>50.00 | 68.00 | 88.00 |
| 862 | அரச வெசாக் வைபவம் | 10.00 | | 30.00 |
| 863 | உலக சிறுவர் ஊழிய எதிர்ப்புத்தினம் | 10.00 | | 30.00 |
| 864 | தொல்பொருளியல் திணைக்களத்தின் 125வது ஆண்டுவிழா | 10.00 | | 30.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 865 | பண்டைய இலங்கையின் மத்திய கால யுகம் | 10.00<br>15.00<br>35.00<br>40.00 | 100.00 | 120.00 |
| 866 | இலங்கையின் மாணிக்கக்கற்கள் | 10.00<br>25.00<br>35.00<br>50.00 | 120.00 | 140.00 |
| 867 | உலக சமுத்திர தினம் | 5.00 | | 30.00 |
| 868 | தேர்தல்கள் திணைக்களத்தின் 60வது நிறைவு விழா | 10.00<br>15.00<br>25.00<br>35.00 | 85.00 | 105.00 |
| 869 | உலக தபால் தினம் | 10.00 | | 30.00 |
| 870 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் 70 வது ஆண்டு பூர்த்தி ஐக்கிய நாடுகளுடன் 60 வருட இலங்கையின் உறவு | 10.00 | | 30.00 |
| 871 | 60 வருடகால இலங்கை தாய்லாந்து இராஜதந்திர உறவு | 10.00<br>50.00 | 60.00,<br>300.00<br>(Sheetlet) | 80.00 |
| 872 | தீபாவளி | 10.00 | | 30.00 |
| 873 | அன்டன் பெச்லச்சி செக்கொப் | 10.00 | | 30.00 |
| 874 | நத்தார் | 10.00<br>35.00 | 45.00 | 65.00 |
| 875 | கொழும்பு மாநகர சபையின் 150வது நிறைவு | 10.00 | | 30.00 |
| 876 | சங்கைக்குரிய தவுள்தென ஜானசர தேரர் | 10.00 | | 30.00 |

## முத்திரைப் பணியகத்தினால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகள்

### 01. நிலையியற் கட்டளை வசதிகள்

இது முத்திரைப் பணியகத்தினால் உள்நாட்டு அடிப்படையிலும் வெளிநாட்டு அடிப்படையிலும் முத்திரைகளை சேகரிப்பவர்களுக்கு சேவையாற்றும் பிரதான வழிமுறையாகும்.

இதன்போது முத்திரை சேகரிக்கின்ற வாடிக்கையாளர்களுக்கு நிரந்தரமாக தமக்குத் தேவைப்படுகின்ற எவ்வகையான முத்திரை அல்லது முத்திரைப் பொருட்கள் என்பதைக் குறிப்பிட்டு நிலையான கட்டளை கணக்கொன்றை திறக்க முடியுமென்பதுடன் அதற்கு போதியளவு நிதியை வைப்புச்செய்ய வேண்டும். அவ்வாறு வைப்புச்செய்கின்ற நிதிக்கு அமைய போதியளவான பொருட்கள் அவர்களுக்கு வழங்கப்படுவதுடன் வைப்புச் செய்யப்படுகின்ற தொகை குறையும்போது கணக்கை மீண்டும் இற்றைப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

### 02. அமயக் கட்டளை வசதி

இந்த அமயக் கட்டளை வசதி முத்திரைப் பணியகத்தினால் வழங்கப்படுவது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அடிப்படையில் முத்திரைகளை சேகரிக்கின்ற போதிலும் நிலையான கணக்குகளை

பேணிவர விரும்பாததுடன் முத்திரைகள் மற்றும் அது சம்பந்தமான பொருட்களை கொள்வனவு செய்ய விருப்பம் கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்காகும். இங்கு மேற்படி வாடிக்கையாளர் விரும்புகின்ற முத்திரைகளின் வகைகள் மற்றும் அது சம்பந்தமான உற்பத்திகள் மாத்திரம் அவர்களுக்கு வழங்கப்படுவதுடன் அவர்கள் ஒரே தடவையில் இதற்கான கொடுப்பனவைச் செலுத்த வேண்டும்.

**03. பாடசாலை முத்திரைக் கழகங்கள்**

பாடசாலை முத்திரைக் கழகங்களை தேசிய மட்டத்தில் ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் 2014ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டன.

## சர்வதேச தபால் சேவைகள் பிரிவு

சர்வதேச தபால் சேவை அத்தியட்சகரின் (சர்வதேச தபால் சேவை) கீழ் இது நிருவகிக்கப்படுகின்றது. உலக தபால் சேவைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் அபிவிருத்தி மூலம் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்த பங்களிப்புச் செய்கின்ற சர்வதேச தபால் சங்கத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் இந்த பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.
சர்வதேச தபால் சங்கம் 1874ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் 1948ஆம் ஆண்டில் இது ஐக்கிய நாடுகள் அமைப்பின் சர்வதேச தபால் அலுவல்கள் பற்றிய நிபுணத்துவ நிறுவனமாக மாற்றமடைந்தது.

அதற்கமைய சர்வதேச தபால் சேவை மூலம்
வெளிநாட்டு பதிவுத்தபால் பதிவுக்கடிதங்கள்
வெளிநாட்டுப் பொதிச்சேவைகள் பொதித்தபால்
EMS(வெளிநாட்டு கடுகதி தபால்)
சிறிய பக்கெட்டுக்கள் (CD) பரிமாற்றம் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன.

2015ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- வெளிநாட்டு தபால் செயற்பாட்டு நடவடிக்கை செயன்முறை கணிப்பிடப்படுகின்ற IPS light முறையில் இருந்து IPS POSTமுறைக்கு மாற்றமடைவதற்காக சர்வதேச தபால் சங்கத்தின் கருத்திட்ட ஆலோசகர் திரு. லொன்ட் முல்லர் வரவழைக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட அலுவலர்கள் 40 பேருக்கு பயிற்சியளித்தல்.
- பிரதேச பயிற்சி செயலமர்வுகள் பலவற்றின் மூலம் நாடு முழுவதிலும் தபால் அலுவலகங்களில் சேவையாற்றுகின்ற தபால் கருமபீட அலுவலர்களுக்கு நடாத்தப்பட்டமை.
- QSF நிதி ஊடாக 5 லொறிகள் கொள்வனவு செய்யப்பட்டமை.

## அத்தியட்சகர் (வழங்கள்) அலுவலகம்

திணைக்கள செயன்முறைக்குத் தேவையான சகல வழங்கள் நடவடிக்கைகளும் உதவி அத்தியட்சகரின் கீழ் வழங்கல் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவு 7 பகுதிகளைக் கொண்டது.

நிர்வாகப் பிரிவு
எழுதுகருவிகள் பிரிவு
தபால் படிவப் பிரிவு
தபால் இயந்திர நிலையம்
தபால் தொழிற்சாலை
பொதி பிரிவு
சிருடைப் பிரிவு

## நிர்வாகப் பிரிவு

வழங்கல் தொகுதி, கணக்காளர் (முத்திரை) மற்றும் இயந்திரப் பொறியியலாளர் ஆகிய 3 அலுவலகங்களினதும் தாபன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

## எழுதுகருவிகள் களஞ்சியம்

2015 ஆம் ஆண்டின் எழுதுகருவிகள் விநியோக விபரம்

| | |
|---|---|
| அரக்கு | 23,012 மப |
| ஈயம் முத்திரை | 11,200 மப |
| ரின் டொக்கட் | 5,074 மப |
| கயிறுப் பந்து | 11,329 மப |
| சணல் கயிறுத் துண்டுகள் | 10,992 மப |
| பாதுகாப்பு பிளாஸ்ரிக் முத்திரை | 2,131,000 மப |
| சுத்தம் செய்த ரின் டொக்கட் | 1,140 |
| தின முத்திரை உறை | 2,241 |
| தின முத்திரை தட்டு | 827 |
| தின முத்திரை மை (கறுப்பு) போத்தல் | 1,980 |
| தின முத்திரை சிவப்பு மை போத்தல் | 36 |
| தின முத்திரை இயந்திர காட்ரிஜ் | 34 |
| சீ.ஆர். புத்தகம் 111 | 1,046 |
| சீ.ஆர். புத்தகம் 11 | 1,081 |
| கணினி பிரின்டர் ரோனர் | 248 |
| கடித உறை 10 x 14 | 42950 |
| கடித உறை 10 x 7 | 45100 |
| கடித உறை 9 x 4 | 296400 |
| கடித உறை 6 x 4 | 246450 |
| அடையாள அட்டை உறை | 27000 |
| காபன் பேனா | 1814 |
| கோப்பு | 955 |
| ஏ4 பிரதிபண்ணி பக்கட் | 2079 |
| எவ்4 பிரதிபண்ணி பக்கட் | 106 |

## படிவங்களின் களஞ்சியம்

| படிவங்களின் வகை | விநியோகித்த எண்ணிக்கை |
|---|---|
| POL 69 (மின்சாரப் பட்டியல் பற்றுச்சீட்டு) | 30,000 |
